
## 'இலங்கைக்கு இனி தமிழ்ப்படங்கள் அனுப்போம்'

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (17-9-66) இதழ் 218
பராபவ புரட்டாதி । ௩௰ ஆகிர் । சனிக்கிழமை




### தமிழ்நாட்டு பட முதலாளிகள் முடிவு

கொழும்பு, வெள்ளி

இந்திய ரூபாவின் மதிப்புக் குறைக்கப்பட்டதன் விளைவாக, இலங்கையிலுள்ள பட இறக்குமதியாளர் படங்களில் ஒப்பந்த இறக்குமதி மதிப்பில் 57 1/2 வீதம் உயர்த்தாவிடில், தாம் இலங்கைக்கு அனுப்பும் எல்லாத் தமிழ்ப்படங்களையும் நிறுத்தி வைக்கப்போவதாகத் தென்னிந்திய படத்தயாரிப்பாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

படங்களின் இறக்குமதி மதிப்பை 57 1/2 வீதம் கூட்டும்படி இலங்கை அரசாங்கத்துக்கு இந்திய அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை இலங்கை அரசாங்கம் நிராகரித்ததைத் தொடர்ந்து, இந்திய பட ஏற்றுமதியாளரின் கூட்டமொன்றை தென்னிந்திய பட வர்த்தகசபை கூட்டியது. அக்கூட்டத்திலேயே மேற்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

(5-ம்பக்கம் பார்க்க)

# அரசாங்கம் மீது எதிர்க்கட்சி சீற்றம்

## நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர முன் அறிவிப்பு

### தொடம்பே முதலாளி மரணம்பற்றிய தீர்ப்பின் எதிரொலி

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி என்பவரின் மரணம் தற்கொலையல்ல, அது ஒரு கைமோசக் கொலைதான் என்று கொழும்பு கோட்டை நீதவான் அளித்துள்ள தீர்ப்பை அடிப்படையாக வைத்து அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவதற்கு மக்கள் பிரதிநிதிகள் சபையில் இன்று எதிர்க்கட்சியினர் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

தொடம்பே முதலாளி என்றழைக்கப்படும் பொடி அப்புஹாமி சதிவழக்கின் புலன்விசாரணைகளின்போது இரகசியப் பொலிஸ் தலைமைக்காரியாலய கட்டிடத்திலிருந்து விழுந்து மாண்டார். இவரது மரணம் முதலில் தற்கொலைஎன தீர்ப்பளிக்கப்பட்டிருந்தது. மாண்டவரின் உறவினர்களின் மனு வொன்றைத் தொடர்ந்து நடைபெற்ற மறுவிசாரணையின்பின், தற்கொலையல்ல; கைமோசக் கொலையென்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தொடம்பே முதலாளியின் கைமோசக்கொலைசம்பந்தமாக புலன்விசாரணைசெய்வதற்கு குருணாகலை பொலிஸ் சுப்பிரிண்டண்ட் திரு. ஏலியன் பெரேரா நியமிக்

(8-ம் பக்கம் பார்க்க)

### பொலிஸ் அதிகாரி பற்றி செனட்டிலும் பிரஸ்தாபம்

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் விஷயத்தில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கருதப்படும் பொலிஸ் அதிகாரிகள் பற்றி புலன் விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் பொலிஸ் சுப்பிரீண்டண்ட் எலியன் பெரேரா சம்பந்தமாக செனட் சபையில் தனிப்பட்ட அங்கத்தவர்களின் கேள்வி நேரத்தில் பிரச்சினை கிளப்பப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

சதிவழக்கு

## தகவல் புத்தகத்திலிருந்து கேள்விகேட்கும் உரிமை

### தீர்ப்பளிக்கும்படி நீதவானிடம் வழக்கறிஞர் கோரிக்கை

கொழும்பு, வெள்ளி

சதிவழக்கு விசாரணை இன்று நடைபெற்றபோது எதிரிகள் தரப்புக்கான வாதங்களைத் தொகுத்துக் கூறவிரும்புவதாக ஞானசிக தேரோவின் வழக்கறிஞர் திரு. கே. சி, டி. சில்வா கூறினார்.

நீதவான் இரண்டு பிரச்சினைகளையிட்டுத் தீர்ப்பு வழங்க

(8ம் பக்கம் பார்க்க)

## முதலில் அட்டோர்ணிஜெனரல் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்ய உத்தரவிட நீதவான் மறுப்பு

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி வழக்கிடிசம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்வதற்கான 'வாரண்ட்' பிறப்பிக்கும்படி இன்று கொழும்புக் கோட்டை நீதவான் வின்சன்ட்சுவர்ணதிபதி முன்னிலையில் ஆஜரான குரிய வழக்கறிஞர் திரு ஏ. சி.டி. சொய்ஸா கேட்டுக் கொண்டார்.

தொடம்பே முதலாளி

(8-ம் பக்கம் பார்க்க)

### 'போலினை அழைத்து கிரிம்பகந்த பேசினர்'

#### கோதபய கொலை வழக்கில் தெகிவளை வாசி சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

கோதபாயாவின் மரணம் கொலையெனத்தீர்ப்பளிக்கப்பட்டது தமக்கு திருப்தி அளிக்காததால் கோதபாயாவின் மரணம்பற்றி புதிதாக விசாரணை செய்ய வேண்டுமெனத்தாம் வற்புறுத்தியதாக கிரிம்பகந்தாவின் உறவினரான சியல் பெரேரா இன்றுகொழும்புத்தெற்கு மாஜிஸ்திரேட் முன் கோதபாயாஇறம்பகந்தவின் கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

கோதபாயாவின் மரணம் பற்றி உறவினர்கள் கூறிய யோசனைகள் அனைத்தையும் கிரம்பகந்தா நிராகரித்து சிறுவனின் மரணச்சடங்குக்கு ஏற்பாடுசெய்தாரென்றும் சியல் பெரேரா கூறினார்.

தெகிவளையைச்சேர்ந்த மார்ட்டின் வர்ணகுல

(8-ம் பக்கம் பார்க்க)

## போதனமொழி; விரைவில் முடிவு

கொழும்பு, வெள்ளி

பாடசாலைகளில் போதன மொழியாக ஒரு பிள்ளையின் தாய்மொழி இருக்கவேண்டுமா அல்லது இதுசம்பந்தமாகத் தீர்மானிக்கும் பொறுப்பு பெற்றோரிடம் விடப்படவேண்டுமா என்பதுபற்றி வெகுவிரைவில் மந்திரிசபை தீர்மானிக்க இருக்கிறது.

கல்விமந்திரி திரு. ஐ. எம் ஆர். ஏ. இரியகொலை இன்று இத்தகவலை வெளியிட்டார்

பிள்ளைகளுக்கான போதனமொழி தாய்மொழியிலேயே இருக்கவேண்டுமெனவும் இதுசம்பந்தமாக உறுதிப்படுத்தும் உரிமை பெற்றோர்களுக்கு இருக்குமென்னும் பிரதமரின் திட்டம் ஜனப்பிரதிநிதிகள் சபையில் சகல பகுதியினரின் ஆதரவையும் பெற்றுள்ளதென்றும் திரு. இரியகொலை தெரிவித்துள்ளார்.

### தமிழரசார் வற்புறுத்தல்

தமிழரசுக் கட்சியினர் தாய்மொழியே பிள்ளையின் போதனமொழியாக இருக்க

(8-ம் பக்கம் பார்க்க)

### தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| முதலாம் பரிசு | |
| 41 Z 0817 | ரூ. 100,000 |
| இரண்டாம் பரிசு | |
| 04 H 0051 | ரூ. 40,060 |
| மூன்றும் பரிசு | |
| 37 K 0743 | ரூ. 10,000 |

(5-ம் பக்கம் பார்க்க)

### குருணகலைக்கு திரும்ப உத்தரவு

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் சம்பந்தமான புலன் விசாரணைகளை நடத்த நியமிக்கப்பட்டிருந்த குருணாகலை பொலிஸ் சுப்ரீண்டன் திரு. எலியன் பெரேராவை மீண்டும் குருணாகலைக்குத் திரும்ப உத்தரவிடப்பட்டுள்ளன. இந்த விஷயம் குறித்து பிரதிநிதிகள் சபை விவாதித்து முடிவு செய்யும் வரை புலன் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

### அட்டோர்ணி ஜெனரல்

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளி மரணம் சம்பந்தமான கோட்டை நீதவான் தீர்ப்பின் அறிக்கையை அட்டோர்ணி ஜெனரல் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர். அந்த அறிக்கை கிடைத்த பின்னர் அட்டோர்ணி ஜெனரல் மேல் விசாரணை பற்றி முடிவு செய்வார்.

நகைகளுக்கு
யப்பான் ஜுவலர்ஸ்
64, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம.
தொலைபேசி: 518
தந்தி: 'யப்பான்''

## இரத்தம் கொடுத்து கோயில் கட்டுகிறார்கள்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப் போக்குவரத்துச்சபை இருந்த ஊழியர் சங்கத்தினர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் 125பைந்து இரத்தம் வழங்கியுள்ளார்கள். இதன்மூலம் கிடைத்த பணத்தை திருக்கோணேஸ்வரம் [illegible] பாலாவிப் பிள்ளையார் கோவில் கட்டிட நிதிக்காக வழங்கியுள்ளார்கள்.

ஏற்கனவே சுமார் ஆறுயிரம் ரூபாய் சேர்த்து பிள்ளையார் கோவில் கட்டிட வேலை [illegible] செய்வதற்காக அடுத்த மாதம் 5ம்6ம் தேதிகளில் யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் சினிமா நடிகை ஈ. வி. சரோஜாகுழுவினரின் நாட்டியநிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### தேவை

மனேஜர்:

மாவிட்டபுரம் "ராஜா ஸ்டோர்ஸ்" ஸில் கடமை யாற்ற மனேஜர் தேவை. வியாபார அனுபவமுள்ளவரும், ரொக்கப்பிணை செலுத்தக்கூடியவரும் விண்ணப்பிக்கலாம். விபரங்கட்கு நேரில் தொடர்புகொள்க. விலாசம்: "ராஜா ஸ்டோர்ஸ்" மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 1267

### விற்பனைக்கு

கோழித்தீன் - கோழி நோய்க்கு மருந்துகள் - வான்கோழி - கினிக்கோழி - W. L. கோழிமுட்டைகள். அருணு ஏஜென்சிஸ், அளவெட்டி. 1252

### வைத்தியம்

சொய்வு, சுசம், நீரிழிவு, சிரந்தி முதலிய சகல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்ற லோசு இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். சித்த டாக்டர் பசி பூரணுனந்தர், J. P. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## வானொலி

### கொழும்பு

சனி 17-9-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீட்டர் & 49 மீட்டர்

பகல் 12-00 சித்திர காவடி, 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின், 7-15 செய்திச்சுருள், 7-30 குங்குமம் — மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 உரைச்சித்திரம், 9-45 மலேசியா மகாநாடு, 10-00 நேயர் [illegible].


**நியூ காலிங்கன்** (இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் [illegible]-30 மணி
எம். ஜி. ஆர், - சரோஜாதேவி நடித்த
**தெய்வத்தாய்**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
ELVIS PRESLEY
MARRY ANN MOBLEY
in
**HAREM HOLIDAY**
(M. G. M' Color)

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர், - ஈ.வி. சரோஜா நடித்த
**கொடுத்துவைத்தவள்**

**மகாத்மா தியேட்டர்** (தெல்லியடி)
தினசரி 6-30 மட்டும்
PYAR KY PYAS
(Color-Scope)
பி. ப. 4 மணி இரவு 9-30
Honey Moon Hotel
(Color Scope)

**மகத்தான இரண்டாவது வாரம்!**
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர்.
பாலையா, ராதா, முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
மற்றும் பலர் நடிக்கும்
பாரத மாதா பிக்சர்ஸ்

**பழநி**

இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
திரைக்கதை - டைரக்ஷன்: பீம்சிங்


# தீவுப்பகுதி பிரயாணிகள் கஷ்டம் பற்றி முறையீடு

யாழ்ப்பாணம், சனி

தீவுப்பகுதி பஸ்சேவை சீர்கேடு சம்பந்தமாக பிராந்திய முகாமையாளர் கூட்டிய மகாநாட்டில், தீவுப்பகுதி எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில், தீவுப்பகுதியைச்சேர்ந்த பிரயாணிகள் கலந்துகொண்டார்கள்.

தீவுப்பகுதிச் சேவையில், பிரயாணிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களை எம். பி. எடுத்துக்கூறினார். கூடிய விரைவில் இக்கஷ்டங்களை நீக்க ஒழுங்கு செய்வதாக முகாமையாளர் தெரிவித்தார்.

தீவுப்பகுதிக்கு மேலதிக பஸ்களை சேவைக்கு விட வேண்டுமென தீவுப்பகுதி எம். பி. திரு. நவரத்தினம் இ. போ. ச. முகாமையாளர்களை விரைவில் சந்தித்துக் கேட்டுக்கொள்வார்.

# பஸ்பிரயாணிகளுக்கு இப்படியும் சில கஷ்டங்கள்!

யாழ்ப்பாணம், சனி

பிரதான வீதிகளில் வளர்ந்திருக்கும் மரங்களினால் இரட்டைத்தட்டு பஸ்களில் பிரயாணம் செய்வோருக்கு சில சமயங்களில் ஆபத்து ஏற்படுகிறது. இவற்றை அகற்ற எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அண்மையில் கைதடி சந்திக்கருகில் ஒரு மரத்தினால் இரட்டைத்தட்டு பஸ்ஸின் முன் கண்ணாடி உடைந்ததால் சிலபிரயாணிகளுக்குச் சிறிய காயங்கள் ஏற்பட்டன. வீதிகளில்வளர்ந்துள்ள மரங்களினால் மயிர்க்கொட்டிப்புழுக்கள் பஸ்ஸினுள் விழுந்து, பிரயாணிகளுக்குக் கஷ்டத்தை கொடுக்கின்றன.

வீதிகளில் வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டுவது பொது வேலைப்பகுதியினரின் வேலையென்றும், இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வேலையல்லவென்றும் இ. போ. ச. அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், பொது வேலைப்பகுதி என்ஜினியர்கள் நடவடிக்கை எடுத்தால் பிரயாணிகள் கஷ்டம் தீருமென்றும் அவர் கூறினர்.

## பெண்கடத்துவழக்கில் வேலையற்ற இளைஞன்

கொழும்பு, சனி

பதினைந்து வயதுப்பெண் எஸ். லட்சுமியைக்கடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வேலையற்ற இளைஞனை எம். ஏ. ரத்னசிரி என்பவர் கொகுவலை பொலிசாரால் கொழும்பு தெற்கு நீதவான் முன்னிலையில் ஆஜராக்கப்பட்டார்.

பொலிசாரின் குற்றச்சாட்டுப்படி பெண்ணின் பெற்றோர்கள் வெளியே சென்றிருந்த சமயம் செப்டம்பர் முதலாம் திகதி லட்சுமியை ரத்னசிரி கடத்திச் சென்றதாக கூறப்பட்டுள்ளது. இவ்விருவரையும் பிலியந்தலையிலுள்ள வீடொன்றில் செப்டம்பர் 6 ம் திகதி கொகுவலைப் பொலிசார் கைது செய்தனர்.

ரத்னசிரி குற்றச்சாட்டை மறுத்தார்.

ரத்னசிரியை செப் 22-ந் திகதி வரை விளக்க மறியலில் வைக்கும்படியும் பெண் லட்சுமியைப் பெற்றோரிடம் சேர்க்கும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

## ஆங்கில மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை

எஃபிட்டி, வெள்ளி

'அடுத்த மாதம் தொடக்கம் எல்லா ஆங்கில மருந்துகளின் விலைகளையும் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவற்றை விற்கும் வியாபாரிகள் ஏழை மக்களிடம் கறுப்புச்சந்தை விலைகளுக்கு இம்மருந்துகளை விற்பதே இந்நடவடிக்கைக்குக் காரணமாகும். இந்தக் கட்டுப்பாடு எதிர்பார்த்த அளவு பயனளிக்காவிடில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்காது.' இவ்வாறு எஃபிட்டியாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது சுகாதார மந்திரி திரு. எம். டி. எச். ஜயவர்த்தன குறிப்பிட்டார்.

## ஆட்சேபம்

சுழிபுரம், வெள்ளி

மாதகல் உபதபால் நிலையத்தை தற்போதையஇடத்தில் இருந்து வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யக்கூடாது என ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக அதிகாரிகளுக்கும் புகார்செய்யப்பட்டுள்ளது.

## புதிய மருந்து நிலையம்

உடுப்பிட்டி, புதன்

மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு மேலும் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் புதிய மருத்துவ நிலையம் அமைக்கப்படவிருக்கிறது. இத்தகவலைஉடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் தெரிவித்தார்.

ருவான்வலை

## மகாவித்தியாலயம் சாம்பியன்

ருவான்வலை, வெள்ளி

எட்டியாந்தோட்டை மாவட்டக் கைப்பந்தாட்ட வருடாந்தச் சுற்றுப்போட்டியில் ருவான்வெலை ராஜசிங்கா மகாவித்தியாலயம் சாம்பியனாகியது.

## பால்உணவு இங்கு இல்லை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில் பால்உணவுக்குப்பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பல குழந்தைகள் [illegible] இங்குள்ள பெற்றோர் மிக்க கவலை கொண்டுள்ளனர்,


## விளம்பரம்

### யாழ்ப்பாண மாநகரசபை கேள்வி அறிவித்தல்

நகரமண்டபத் தரை திருத்தவேலை செய்வதற்கு 26-9-66 நண்பகல் 12 மணி வரை பதிவு பெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து இரண்டு பிரதிகளுடன் கூடிய அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரத்தின் விலையாக ரூபா 5/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூபா 50/-ம் செலுத்தி 23-9-66 நண்பகல் 12 மணி வரை மாநகரமராமத்து பொறியியலாளரிடம் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏனைய விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகர மராமத்து பொறியியலாளரிடம் பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா,
மாநகரசபை ஆணையாளர்
யாழ்ப்பாணம்
14-9-66. 978

அரசாங்க கேள்விப்பத்திரங்கள்
வவுனியாக் கச்சேரி

என். 2347 - வவுனியா மாவட்டத்தில் பொதுக்கிணறு கட்டிட வேலைகள் கேள்விகள் முடிவு திகதி 24-9-66.

சௌக்கிய சேவைப் பகுதி

என் 2364 - ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கும் ஊர்காவற்றுறை தொற்றுநோய் ஆஸ்பத்திரிக்கும் குடிதண்ணீர் வழங்குதல் கேள்விகள்முடிவு திகதி 8-10-66:

இதன் முழு விபரங்களுக்கும் 16-9-66-இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளை சகல கச்சேரிகளிலும், பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் கந்தோர்களிலும், தபாற் கந்தோர்களிலும் உப-தபாற் கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம். 4520


## மாநகரசபைக்கு ஜெயனெட்டி

கொழும்பு, வெள்ளி

கொழும்பு மாநகரசபை உதைபந்தாட்ட கோஷ்டி கே. எம். டி. ஜெயனெட்டி வெற்றிக்கிண்ணத்தைத்தட்டிக்கொண்டது. சுகததாசா ஸ்டேடியத்தில் அரசாங்க சேவை 'ஏ' பிரிவுடன்மோதிக்கொண்ட போட்டியில் 4-0 கோல்களால் மாநகரசபை வெற்றி பெற்றது.

## துணிக் கூப்பன்கள் இனி இல்லை?

கொழும்பு, சனி

எவ்வளவு விரைவோ அவ்வளவு விரைவில் துணிகளுக்கான கூப்பன்முறையை எடுத்துவிடுவதற்கானதிட்டமொன்றைச் சமர்ப்பிக்கும்படி வர்த்தக அமைச்சர் டாக்டர் எம். வி. பீ. பீரிஸுக்கு மந்திரிசபை உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகிறது.


உ

## திருமண திருமுகம்

அன்புடையீர்!

பரமன், பார்வதி திருவருள் கொண்டு, நிகழும் பராபவ ஆண்டு ஆவணித்திங்கள் 31-ம் நாள் (16-9-66) வெள்ளிக்கிழமை மு. ப. 7 மணி—9 மணி வரையுள்ள சுபவேளையில் திரு. சி. தம்பிஐயா அவர்களின் புத்திரன் செல்வன் குணபாலசிங்கம் அவர்களுக்கும் எமது புத்திரி செல்வி அருந்ததி அவர்களுக்கும் ஸ்ரீ செல்வச்சந்நிதிக் கந்தன் தேவஸ்தானத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவம் காரணமாக 18-9-66 ஞாயிற்றுக்கிழமையும்- 19-9-66 திங்கட்கிழமையும் பி. ப. 3 மணி தொடக்கம் எமது இல்லத்தில் நடக்கவிருக்கும் கொண்டாட்டத்தில், தங்கள் இஷ்டமித்திர குடும்ப சகிதம் சமுகந்தந்து பங்குபற்றித் தம்பதிகளை ஆசீர்வதிக்கும் வண்ணம் எமது அன்பர் அனைவரையும் வேண்டிக்கொள்ளுகிறோம். போதிய அவகாசமில்லாமையால் தனித்தனி அழைப்பு அனுப்ப முடியவில்லையென்பதையும் தாழ்மையுடன் தெரிவிக்கிறோம்.

அன்பு வணக்கம்

இங்ஙனம்,
தங்கள் அன்புள்ளவன்
சீ. விளுசித்தம்பியும் மனையாளும
(ஆசிரியர், கதாப்பிரசங்கியார், அளவையூர் - சஞ்சீவி)

"ஓம் சிவசக்தி"
அளவெட்டி தெற்கு
அளவெட்டி.
14-9-66 1006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென் மேற்கு ஆபிரிக்காவை ஐ. நா. பொறுப்பேற்கவேண்டும்!

## காமன்வெல்த் மகாநாட்டில் அங்கத்துவ நாடுகள் வற்புறுத்து

லண்டன், செப்டம்பர் 16

**தென் மேற்கு ஆபிரிக்கா சுதந்திரம் பெறும் வரை அதனைக் கண்காணிக்கும் பொறுப்பை ஐ. நா. ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சாம்ராஜ்ய பிரதம மந்திரிகள் மகாநாட்டில் பெரும்பான்மையான அங்கத்தவ நாடுகள் கோரியுள்ளன.**

தென்னாபிரிக்காவின் கீழ் தென் மேற்கு ஆபிரிக்கா நசுக்கப்பட்டு அல்லற்பட்டு வருவதை பல அங்கத்தவ நாடுகள் சுட்டிக்காட்டி இந்தக் கோரிக்கையை முன் வைத்தனர்.

முடிவடைந்த சாம்ராஜ்ய நாடுகளின் பிரதமர்கள் மகாநாட்டின் இறுதியில் இந்திய வெளியுறவு மந்திரி திரு. சுவரண்சிங் பேசுகையில், வடவியட்னம் மீது அமெரிக்கா குண்டுவீச்சை நிறுத்தினால்தான் வியட்னும் பிரச்னையில் சமாதானம் ஏற்படுமென்றார்.

### சீனாவை மாற்றலாம்!

சீனா பற்றி திரு. சுவரண்சிங் தெரிவிக்கையில், சீனாவின் போக்கை மாற்றலாம் என்ற நம்பிக்கையிருப்பதால்தான் ஐ. நா.வில் சீனாவுக்கு இடமளிக்கப்படவேண்டுமென்று பாரதம் வற்புறுத்திவருகிறது என்றார்.

### ஒரே மாற்றம்

''பிரிட்டன் கொள்கையில் ஒரேயொரு மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. சட்டவிரோதமான அயன் ஸ்மித்தின் ரொடீஷிய ஆட்சிக்கு எதிராக அங்கத்துவ நாடுகளின் கருத்துப்படி பாரதூரமான நடவடிக்கைகளை எடுப்பது என பிரிட்டன் முடிவுசெய்துள்ளது. இந்த மாறுதலை விட வேறு எந்தவிதமான மாறுதலும் இடையாது'' என்று பிரிட்டிஷ் பிரதமர் வில்சன் நிருபர்களுக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

### காமன்வெல்த் காப்பாற்றப்பட்டுள்ளது

''இந்த மகாநாடு காமன்வெல்த்தைபலவீனப்படுத்தியிருக்கிறதா அல்லது பலப்படுத்தியிருக்கிறதா?'' என்று கேட்ட கேள்வியொன்றுக்கு பிரதமர் வில்சன் பதிலளிக்கையில், 'காமன்வெல்த் இந்த மகாநாட்டால் காப்பாற்றப்பட்டுள்ளது' என்று சொன்னார்.

வட வியட்னாமில்

## அமெரிக்க விமானத் தாக்குதல்

சைகோன், செப். 16

வடக்கு வியட்னாமில் டாய்ஹையுக்கு அருகேயுள்ள இராணுவத் தளங்கள் மீது இன்று அமெரிக்க ஜெட்விமானங்கள் தொடர்ந்து எட்டாவது நாளாகத் தாக்குதல்கள் நடாத்தின. ரடார் மற்றும் ஏவுகணைகள் ஏற்றும் வண்டிகள் நாசமாக்கப்பட்டன. இத்தாக்குதலில் இரண்டு அமெரிக்க விமானங்கள் வடவியட்னும் துருப்புகளால் சுட்டு வீழ்த்தப்பட்டன. இதன்மூலம் வடவியட்னும் இதுவரை சுட்டுவீழ்த்திய அமெரிக்க விமானங்களின் தொகை 307 ஆக உயர்ந்துள்ளது.

## நீக்ரோ உரிமைகள் சட்டமாகா!

வாஷிங்டன், செப், 16

நீக்ரோக்களுக்கு அதிக பாதுகாப்பும் சந்தர்ப்பமும் அளிப்பதற்கான அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸனின் திட்டங்கள் இவ்வருடத்தில் சட்டமாகும் வாய்ப்புக் கிட்டாதுபோல் தெரிகின்றது.

சர்ச்சைக்குரிய சிவில் உரிமைகள் மசோதாவுக்கு எதிராகத் தென்னமெரிக்க செனட்டர்கள் கையாண்ட தாமத தந்திர நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதில் செனட்சபை தோற்றுத் தோல்வியே கண்டது. (பி டி ஸி)

## குவாலியூர் நகரில் பொலிஸார் சுட்டனர்

### ஒருவர் பலி

புதுடில்லி, செப். 16

குவாலியூர் நகரில் வன்முறைக் கும்பலொன்று பொலிஸ்நிலையத்தை தாக்க முயற்சித்தபோது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் பலத்த காயத்துக்குள்ளானார். கொல்லப்பட்டவர் மாணவரல்ல என்று அறிவிக்கப்பட்டது.

## ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பல் மூழ்கியது

லண்டன், செப். 16

இருபத்தியொரு மாலுமிகளுடன் கூடிய ஜெர்மன் நீர்மூழ்கிக் கப்பலொன்று வடகடலில் மூழ்கியதாக அறிவிக்கப்பட்டது.

## மின்சாரம் வேண்டும்

யாழ்ப்பாணம், சனி

புதிதாகக் கட்டப்பட்டுள்ள சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கு மின்சாரம் வழங்கும்படி மீசாலை [illegible] போக்குவரத்து மந்திரியைக் கேட்டுள்ளது.

# நவம்பர் 3-ல் ராஜினமா செய்வது உறுதி!

## யுதாண்ட் அறிவிப்பு

நியூயார்க், செப். 16

ஐ. நா. சபையின் பொதுக் காரியதரிசி பதவியிலிருந்து இவ்வருடம் நவம்பர் 3-ம் திகதி ராஜினமாச் செய்துகொள்வதென்ற தமது தீர்மானத்தை யுதாண்ட் மீண்டும் இங்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

''பொதுக்காரியதரிசி பதவியிலிருந்து நவம்பர் 3-ந் திகதி நான் ராஜினமாச் செய்வது உறுதி'' என்று யுதாண்ட் கூறினர்.

நேற்று இங்கு நடைபெற்ற பத்திரிகை விருந்தொன்றில் பேசுகையிலேயே அவர் இதனை வலியுறுத்தினர். பல நாடுகளைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் இவ்விருந்தில் கலந்துகொண்டனர்.

புதிய நபர் ஒருவரை பொதுக்காரியதரிசி பதவிக்குத் தேர்ந்தெடுக்கத் தயாராகும்படி அங்கத்துவ நாடுகளை யுதாண்ட் கேட்டுக்கொண்டார்.

பொதுக்காரியதரிசி பதவியிலிருந்து தாம் ராஜினமாச் செய்துகொள்ளப்போவதாக யுதாண்ட் செப்டம்பர் 1-ம் திகதி அறிவித்திருந்தார்.

# யாராவது நம்மைத் தாக்கினால் பணிந்து போகமாட்டோம்!

## பிரதமர் ஸ்ரீமதி இந்திரா முழக்கம்

அலகாபாத், செப். 16

''அண்டை நாடுகளுடன் ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழ்வதையே இந்தியா மனப்பூர்வமாக விரும்புகிறது ஆனல், யாராவது எம்மைத் தாக்கினல் அவர்களுக்குப்பணிந்து சமாதானமாகப் போவதென்ற அர்த்தமில்லை'' என்று இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திராகாந்தி இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் சொன்னர்.

பிரதமர் இந்திரா இப்போது தமது பகுதியான உத்தர பிரதேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்கிருர்.

ஸ்ரீமதி இந்திராகாந்தி மேலும் பேசுகையில் கூறியதாவது:

பாரதம் பலதுறைகளிலும் முன்னேறத் தொடங்கியுள்ளது இதனல் வர்த்தகம் சம்பந்தமான விஷயங்களில் வேற்று நாடுகளுடன் பிணக்குகள் ஏற்படுவது சகஜம்.

### மக்களால் முடியும்

நடப்பு வருடம் பாரதத்துக்கு பெரியதொரு சோதனைக்காலம். அவைகளைச் சமாளிக்க வேண்டியபெரும் பொறுப்பு மக்களையே சாரும். நம்மக்கள்மீது அசையாத முழுநம்பிக்கை எனக்குண்டு. கடந்த காலங்களில் ஏற்பட்ட பயங்கரமான நேரங்களில் அவர்கள் நடந்து கொண்டவிதம்தான் இப்படியான ஒரு நம்பிக்கையை எனக்கு அவர்கள்மீது ஏற்படுத்தியுள்ளது.

பாரதம் அயல் நாடுகளுடன் சமாதானமாக வாழ்வதையே விரும்புகிறது. ஆனல் வலிய சண்டை எண்ணத்துடன் வருபவர்களைப் பார்த்துக் கொண்டு பாரதமாதா சும்மா இருக்கமாட்டாள்.

# அமெரிக்க விண்வெளிக் கப்பல் 'ஜெமினி-11'ன் புதிய சாதனை

கேப்கென்னடி, செப்டம்பர் 16

அமெரிக்க விண்வெளிக்கப்பல் 'ஜெமினி—11' மூன்று நாள்வரை உலகத்தைச் சுற்றி வலம்வந்த பின்னர் புதிய சாதனையொன்றுடன் அட்லாந்திச் சமுத்திரத்தில் நேற்றிரவு வந்திறங்கியது. இந்த விண்வெளிக் கப்பலில் பிரயாணம் செய்த வீரர்களான பீற் கொன்ராட்டுக்கும், றிச்சார்ட் கோர்டனுக்கும் இங்கு வீரவரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த விண்வெளிக்கப்பல் 'ஜெமினி—10' ஐவிட இருமடங்கு உயரப் பறந்து புதிய சாதனையை ஏற்படுத்தியது.

# சீனவில் கொந்தளிப்பு!

## மா - சே - துங் படம் நொருக்கப்பட்டது

ஹாங்காங், செப். 16

சீனவில் கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாக செய்திகள்கிடைத்துள்ளன. மா-சே-துங்கின் சட்டம் போட்ட படத்தை தொழிலாளர்கள் உடைத்து நொருக்கியதாக அறிவிக்கப்பட்டது. செஞ்சீனவின் புரட்சி இயக்கத்தினரான செங்காவலருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்தே தொழிலாளர்கள் இவ்வித நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

நேற்று பீகிங்கிலுள்ள பரலோக சமாதான சதுக்கத்தில் [illegible]க்கு மேற்பட்ட மாணவர்கள், செங்காவலர் படையினர் திரண்டிருந்த ஒருமாபெரும் கூட்டத்தில் சீனப்பிரதமர் திரு. சூஎன்லாய் முழங்கினுர். செங்காவலர்களை இராணுவங்களுக்குச் சென்று நடவடிக்கைகளைச் சிறிது காலம் நிறுத்திவைக்கும்படி கேட்டுக் கொண்டார்.

செங்காவலர்களின் கலாச்சாரப் புரட்சி திபெத்வரை பரவியுள்ளதாக நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்துள்ளது மாசேதுங்கின் புத்தகங்களை திபெத் மக்கள் விரும்பிப் படிப்பதாகவும் அது தெரிவித்தது.

சீனுவின் முக்கிய இடங்கள், வீதிகளின் பெயர்களை செங்காவலர் படையினர் மாற்றிக் கொண்டிருப்பதாகவும் தொழிற்சாலைகளுக்குள் நுழைந்து தொழிலாளர்களை செங்காவலர் பயங்கரமாகத் தாக்கிக் கொண்டிருப்பதாகவும் இதுபற்றித் தெரிவிக்கையில் மாஸ்கோ செய்[illegible] ஸ்தாபனமான 'டாஸ்' [illegible]றிவித்தது.

# மகாவலிகங்கை திட்டத்தால் தமிழ் நாடும் பயன்பெறும்

## 15 கோடி வாட் மின்சாரம் வழங்க இலங்கை தயாராம்

சென்னை, செப். 16

இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்கு மின்சாரம் பெற்றுக்கொள்ளும் சாத்தியக் கூறுகள்பற்றி இந்திய அரசாங்கம் ஐ. நா. பொருளாதாரப் பிரிவிடம் கேட்டிருந்ததற்கு இப்போது சாதகமான பதில் கிடைத்திருப்பதாக அறியப்படுகின்றது.

இந்தியாவுக்கு மின்சாரம் வழங்கமுடியுமா என்பதுபற்றி இலங்கை அரசாங்கம் ஐ. நா. கோரிக்கையின் பேரில் பரிசீலித்ததில் மின்சாரம் வழங்கமுடியும் என்ற முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகின்றது.

மகாவலிகங்கைத் திட்டத்தில் மின்சார உற்பத்தியும் ஒரு அம்சமாக இருக்கின்றது. இப்படி உற்பத்தியாகும் மின்சாரத்தில் இந்தியாவுக்கும் சுமார் 15 கோடி வாட் மின்சாரத்தை விற்க முடியும் என்று இலங்கை அதிகாரிகள் அறிவித்திருப்பதாகத் தெரிகின்றது. இந்தத் திட்டத்தின்படி தமிழ் நாட்டிற்குமின்சாரம் கிடைக்குமானல் தமிழ்நாட்டிலுள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கிடைத்துவிடும் என்று நம்பப்படுகின்றது.

## பிலிப்பை[illegible]ஸ் சிறையில் கலவரம்

### நால்வர் பலி

மணிலா, செப். 16

தெற்கு பிலிப்பைன்ஸில் உள்ள செபு நகரில் நடைபெற்ற சிறைச்சாலைக் கலவரம் ஒன்றின்போது சிறைக்காவலர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததன் விளைவாக நான்கு கைதிகள் கொல்லப்பட்டனர். 25 கைதிகள் காயமுற்றன. (பி டி ஸி)

## சரவாக்கில் மலேஷியா அவசரகால நி[illegible] பிறப்பித்தது

கோலாலம்பூர், செப். 16

மலேஷிய அரசாங்கம், சரவாக்பகுதியில்நேற்று அவசரகாலநிலைமைச் சட்டம்பிறப்பித்துள்ளது. சரவாக்கின் முதல்மந்திரி டாற்றோ ஸ்டீபன் கலோங் நிங்கானைப் பதவியிலிருந்து அகற்றமலேஷியா முயற்சிக்கிறது.

சரவாக்கூட்ட அசெம்பிளியை அழைத்து, சரவாக்கின் முதல் மந்திரியை வேலைநீக்கம் செய்வதற்கு அதன் கவர்னருக்கு அதிகாரம் அளிக்கும்வகையில் சரவாக் அரசியற் சட்டத்தைத் திருத்தியமைக்கும் பொருட்டு பார்லிமெண்ட் அடுத்த திங்கட்கிழமை கூட்டப்படுமென மலேஷிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரசாக் கோலாலம்பூரில் அறிவித்துள்ளார்.

மலேஷியப் பிரதமர், சரவாக் முதல் மந்திரி பதவியிலிருந்து டாற்றோ நிங்கானை வேலைநீக்கம் செய்த உத்தரவு செல்லுபடியாகாது என்று சரவாக் உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்தது. (பி. டி. ஸி.)

## குமாரமங்கலம் ரஷ்யா சென்ருர்

புதுடில்லி, செப் 16

இந்திய ராணுவத் தளபதி திரு. குமாரமங்கலம் இன்று காலை மாஸ்கோ புறப்பட்டார். மாஸ்கோவிலிருந்து வந்த உத்தியோகபூர்வமான அழைப்பை ஏற்றுச் செல்லும் இவர் சோவியத் ரஷ்யாவில் 15 நாட்கள் தங்கிருப்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

தெய்வ பக்திதான் விலைமதிக்கமுடியாத செல்வமாகும். 'செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.' விவாதங்களும், தர்க்கங்களும் தெய்வத்தை உணர உதவா. தியானம் மனதைத் தெளிவித்து புலனடக்கத்துக்கும் வழிசெய்யும்.

—சுவாமி சிவானந்தர்

ஈழநாடு

EELANADU National Tamil Daily, Post Box 49 JAFFNA.

Telegrams : EELANADU Jaffna; Telephone : 388

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு புரட்டாதி 1 | 17-9-66

## தேயிலை, ரப்பர் விலை வீழ்ச்சி

உலக சந்தையில் தேயிலை, ரப்பர் ஆகியவைகளின் விலைகளில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இலங்கையின் பிரதான ஏற்றுமதிப் பொருள்களாகவும், இலங்கையின் பொருளாதாரத்தின் ஆணி வேராகவும் விளங்கும் தேயிலை, ரப்பர் ஆகியவைகளின் விலை வீழ்ச்சி இலங்கைக்கு எதிர்பாராத விதத்தில் ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பொருளாதார நெருக்கடி என்றே கொள்ளவேண்டும்.

இந்த நெருக்கடி எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டதுஎன்பதுபற்றி ஆராயவேண்டியதுதான் என்றாலும் இப்பொழுது தான் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளதெனச் சொல்ல முடியாது. வெள்ளையர் பற்றி சேர் ஜோன் கொத்தலாவலை லண்டனில் ஏதோ சொன்னதற்காக தேயிலை விலை திடீரென வீழ்ச்சியடைந்ததும் அமெரிக்கா தான் குவித்துவைத்திருக்கும் செயற்கை ரப்பரை வெளியே விடுத்ததும் ரப்பர் விலையில் வீழ்ச்சி ஏற்படுவதும் இதற்குப் போதியசான்று.

தேயிலை, ரப்பர் விலை வீழ்ச்சியால் ஏற்படும் நெருக்கடியை எப்படிச் சமாளிக்கவேண்டுமென்பதை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கவேண்டியதே இன்றுள்ள முக்கிய பிரச்னை.

வெளிநாடுகளுடன் உதவி ஒப்பந்தமோ, வர்த்தக ஒப்பந்தமோ செய்து கொள்கையில் பண்டமாற்று முறையான ஒப்பந்தம் செய்துகொண்டால் இப்படியான திடீர் நெருக்கடிகள் ஏற்படுவதற்கு இடமிருக்காது. எமது வெளிச் செலாவணிக்கு தேயிலை, ரப்பர் ஆகிய இரண்டு விளை பொருள்களை மட்டும் இனியும் நம்பியிருப்பது நல்லதல்ல. நமதுதேவைக்கான உணவுப்பொருள் உற்பத்தியை அதிகரிப்பதுடன் [illegible]த்தொழில், கைத்தொழில்களையும் விருத்திசெய்யவேண்டும். நம்நாட்டிலுள்ள மூலப் பொருள்களைப் பயன்படுத்திப் பல்வேறு பொருள்களை உற்பத்திசெய்வதன் மூலம் எமது தேவைகளுக்கு வெளிநாடுகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை நீடிக்காது. நமது விளைபொருள்களின் ஏற்றுமதியை மட்டும் நாம் வெளிச்செலாவணிக்காக நம்பியிருக்கவேண்டிய நிலையும் மாறலாம்.

## நமது மாணவர் கஷ்டம்

புதிய கல்வி ஆண்டு தொடங்கிவிட்டது அத்துடன் உயர்கல்வி பெறுவதற்காகபல்கலைக் கழகம் செல்லும் நமது மாணவ மாணவியரின் கஷ்டமும் ஆரம்பமாகிவிட்டது.

பல்கலைக்கழக இட நெருக்கடி பழைய விஷயம் தான். ஆனால் இனியும் அந்த நிலைமாருமலிருப்பது கல்விபெறும் மாணவ மாணவியருக்கும், அவர்களது பெற்றோருக்கும் மட்டுமல்ல நாட்டுக்குமே நல்லதல்ல. உயர் கல்வி மசோதாவை அவசர அவசரமாகக்கல்வி அமைச்சர் நிறைவேற்றி விட்டார். உயர்கல்விச் சீர்திருத்தத்தை இவ்வருடமே அமுல் நடத்துவதற்காகத்தான் அந்த மசோதாவை அவசர அவசரமாக நிறைவேற்றுவதாக அவர் சொன்னார். உயர்கல்விச் சீர்திருத்தத்துடன் கல்விபெறும்மாணவர், தங்கியிருப்பதற்கும் நல்ல உணவு கிடைப்பதற்கும் வசதிசெய்ய வேண்டியது அவசியம். பேராதனைப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட்ட பொழுது ஒவ்வொரு மாணவனும் தங்கியிருந்து படிப்பதற்கென விசாலமான அறை அமைக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது ஒரு அறையில் மூன்று நான்கு மாணவர் முடங்கிக் கிடக்கவேண்டிய நிலையிலுள்ளனர். இது வருங்காலத் தலைவர்களான நமது மாணவர்களின் மனப்போக்கைக் குறுக்குமேயொழிய விசாலமாக்கமாட்டாது.

பல்கலைக் கழகத்தில் மாணவ மாணவியர்கஷ்டமின்றிக் கல்வியில் கவனம் செலுத்தக்கூடிய முறையில் இடவசதி அளிக்கப்படவேண்டும். இல்லையேல் பல்கலைக்கழகக்கல்லூரிகளையாவது விரைவில் அமைத்துமாணவரினது கஷ்டங்களை நீக்க வேண்டும்.


## பெண்ணின் பெருமை

ஸ்தானாதிபதியாக இலங்கையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஒரு பெண்மணி நியமிக்கப்பட்டிருக்கிறார். இது பெண்களுக்கு மட்டுமல்ல இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதாகும்.

கல்வி சிரமைப்புத்திட்டத்தின்கீழ் வடபகுதிவித்தியாதிபதியாக அடுத்த மாதம் முதல் திருமதி ஆர். நவரத்தினம் நியமிக்கப்பட்டிருக்கிறார். ஆசிரியையாகவும் வித்தியாதரிசினியாகவும். வித்தியாதிகாரியாகவும் கல்வித்துறையில் பலபதவிகளைவகித்து கல்வி வளர்ச்சிக்கும் மாணவ மாணவியரின் வளர்ச்சிக்கும் சேவைபுரிந்துள்ள திருமதி நவரத்தினம் சமய, சமூகத்துறைகளிலும் தொண்டாற்றியிருக்கிறார்.

சந்தர்ப்பம் கிடைத்தால் பெண்கள் எப்பணியையும் சிறப்பாகச்செய்வார்களென்பதற்கும் ஆண்களுக்குப் பெண்கள் சளைத்தவர்களல்லர் என்பதற்கும் திருமதி நவரத்தினம் போன்ற பெண்மணிகள் பலர் இங்கு இருக்கின்றனர். அவர்களும் கல்வி, விஞ்ஞானம், அரசியல் துறைகளில் முன்னின்று இந்நாட்டு மக்களுக்கும் [illegible] நாட்டுக்குப்பெருமை தேடித் தருவார்களென்று எதிர்பார்ப்போம்.

# கோப்பாய் கோமான் வன்னியசிங்கம்



கோப்பாய்த்தொகுதிஎம். பி. யாக விளங்கி ''கோப்பாய்க்கோமான்'' எனப் பெயர்பெற்ற திரு. கு. வன்னியசிங்கம் தமிழரசுக்கட்சியின் ஸ்தாபகதலைவர்களில் ஒருவர்.

தமிழ் உரிமைக்காக அவர் நடத்திய போராட்டங்களும் போராட்டங்களுக்கு அவர் வகுத்த திட்டங்களும் பல. வடக்கு கிழக்கு, மலைநாடு என பிரிந்திருந்த இலங்கைவாழ் தமிழ் மக்களை இணைப்பதற்கு ஒரு பாலமாக விளங்கிய திரு. வன்னியசிங்கம் தமிழ் உரிமைப் போராட்டம் காரணமாக சிறைசென்று நோய் வாய்ப்பட்டார். அவர் மறைந்தாலும் மக்கள் அவரைமறக்கவில்லை. இன்று பல இடங்களிலு அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

வன்னியசிங்கம் பற்றி திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியது இச்சமயம் நினைவு கூறத்தகுந்தது:- பல அரிய பெரிய குணதிசயங்களைக் கொண்டிவங்கிய அண்ணாவின் இரண்டு விடசேமிகளை மாத்திரம் தனியாக எடுத்துக் கூறுவது என் கடமை.

முதற் தொடங்கித் தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமாகிய தமிழரசு இயக்கத்தில் அவருடன் ஒத்துழைத்தவன் என்ற முறையில் நான் அவரைப் பற்றிக் கூறும் சாட்சியாவது:-

திருவாளர் வன்னியசிங்கம் இல்லாமல் தமிழரசு இயக்கம் உற்பத்தியாகியிருக்கவும் மாட்டாது. இன்று அதிருக்கும் உயர்வுக்கு வளர்ந்திருக்கவும் மாட்டாது என்பதே. இந்த இயக்கத்தை உச்சநிலையில் விட்டு எங்கள் நண்பன் பிரிந்துவிட்டார்.

இரண்டாவதாக எடுத்துக்காட்டவேண்டிய குறிப்பு:- திரு வன்னியசிங்கம் ஒரு பெருந் தியாகி, உண்மையாக அவர் இனத்திற்குச் செய்த சேவையினால் நடுவயதில் காலமாக வேண்டிவந்தது. அவரைக் கொன்ற நோய் சிலகாலங்களாக அவரைப் பீடித்திருந்தது. அவருடைய வைத்தியர்களின் புத்திமதிப்படி அவரது வேலைகளைக் குறைத்திருந்தால் இன்னும் சில காலம் வாழ்ந்திருப்பார். அப்படி நோய்கொண்டிருந்தும் தன்னிடம் உதவியை நாடிவரும்எவருடைய பணியையும் ஏற்றுக்கொண்டு இடைவிடாமல் தொண்டு செய்தார். இதன்பயன் நோய் பெருகி அவர் சடுதியாய் மரணமனார்.

# ஐயாறன் எழுதுவது

நமது எம். எஸ். சுப்புலட்சுமி ஐக்கிய நாடுகள் சபையில் அடுத்த மாதம் பாடப்போவதாகவும். காரியதரிசி யுதாண்ட் அழைத்துள்ளதாகவும் செய்தியைப் படித்ததும் நமக்கெல்லாம் சொல்லமுடியாத மகிழ்ச்சியும் பெருமையுமாக வுள்ளதல்லவா?

ஒரு தமிழ்ப் பெண்மணி உலக மகாசபையிலே தமிழிசை விருந்து அளிக்கப் போவதை அறிய எந்தத் தமிழருக்குத்தான் பெருமையாயிராது. எம். எஸ் தமிழகச்செல்வம் மட்டுமல்ல. அவர் உலகச் செல்வம். அவர் வாழ்க!

ஃ ஃ ஃ

சில வருடங்களுக்கு முன் புதுடில்லிக்கு பல சிங்கள பத்திரிகைக் காரருடனே இந்திய அரசாங்கத்தின் அழைப்பின்மீது சென்றிருந்தேன். அப்போது உபஜனாதிபதியாக இருந்த டாக்டர் ராதாகிருஷ்ணன் எங்களை அழைத்து சிற்றுண்டி அளித்தார். (அவலை சுத்தமான நெய்யிலே பொரித்து, சர்க்கரை, முந்திரிப் பருப்பு முதலியவை சேர்த்துக் கொடுத்ததை இன்னும் இந்தநாக்கு மறக்கவில்லை)

அச்சமயம் அவர் பங்களாவின் உள்ளே இருந்து இன்னிசை கேட்டது. அது எம். எஸ். ஸின் குரல். திருவையாறு தியாகராஜசுவாமி உற்சவத்திலிருந்து அஞ்சல் செய்தனர். ''இது யார் பாடுகிறது தெரியுமா? எம். எஸ. சுப்புலட்சுமிதான்'' என்று டாக்டர் ராதாகிருஷ்ணன் பெருமையுடன் கூறி 'உங்களுக்கு எம் எஸ். ஸின் பாட்டு பிடிக்குமா?'' என்று என் சகாக்களைக் கேட்டார். அவர்களில் பலருக்கு எம். எஸ், என்றாலே யார் என்று தெரியாதுபோலும். ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஒருவர் தமக்கு இந்தப் பாட்டு பிடிக்காது'' என்று சொன்னதைக் கேட்டதும் திடுக்கிட்டுப்போனேன். உப ஜனாதிபதி என்ன நினைத்திருப்பார்!

ஃ ஃ ஃ

இதை ஏன் சொல்லுகிறேனென்றால், ஐ. நா. சபையிலே எம். எஸ். பாடுவதாயின், அங்குள்ளவர்கள் அதை சரிவர ரசிப்பார்களா? கழுதைக்குத் தெரியுமா கற்பூர வசனை என்று சந்தேகமேற்படுகிறது.

சில வருடங்களுக்கு முன் வைஜந்திமாலா, மேல்நாடுகளுக்குச் சென்று பரதநாட்டியம் ஆடுகையில், அவர்களில் பலர் ரஸிக்காமல் வெளியேறியதாயும், அரை நிர்வாணமாக 'சர்க்கஸ் டான்ஸ்' ஆடுவதையே அவர்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பதாயும் சொன்னதாக ஞாபகம். எம். எஸ். ஸின் இன்னிசையை நம் சிங்களச் சகோதரரே ரஸிக்கத் தெரியாமலிருப்பின், ஐ. நா. சபையில் கூடும் மற்றவர்கள் எப்படி அதை ரஸிக்கமுடியும்? இப்படியான எண்ணங்களெல்லாம் ஏற்பட்டது.

இது எப்படியாயினும் நமது தமிழ்க் கலைக்கும் கலைஞருக்கும் உலக சபையிலே ஏறக்கூடிய அந்தஸ்துக் கிடைத்ததே பெரியகாரியம் இனி இதன் அருமையை உணர்ந்து ரஸிக்கக்கூடியவர்கள் பாக்கியவான்கள்.

ஃ ஃ ஃ

நமது இசைகளை மட்டுமல்ல, தமிழரின் சமையல் கலைக்கும் பிரிட்டன் முதலிய ஐரோப்பியநாடுகளிலே புதிய 'கிராக்கி' ஏற்பட்டுள்ளதாக ஒரு செய்தியைப்படித்தேன். பிரிட்டிஷ் தாய்மார்களில் சிலர் நமது சாம்பார், ரஸம், மோர்க்குழம்பு, கறி முதலியவற்றை சாப்பிட்டுப் பார்த்துவிட்டு அதை எப்படிச் சமைப்பதென்பதை, சிமையிலுள்ள தமிழ்ப் பெண்களிடம் கற்றுக்கொண்டு வீட்டில் சமைத்துப் பார்ப்பதாயும், நமது சமையல் முறையைக் கற்க அவர்களில் பலரும் பெரிதும் ஆவல்காட்டுவதாகவும் ஒரு பத்திரிகை தெரிவிக்கிறது. தமிழரிடமிருந்து ஒரு வடையைக் கற்றுக்கொண்டு பல சிங்கள அன்பர்கள் ''வடே, வடே'' என்று ரயில்வே ஸ்டேஷன்களிலெல்லாம் கதறி விற்றுப் பிழைப்பதைப் பார்க்கின்றோம். இன்னும் சில காலம் சென்றால், ''வடே'' என்பது அசல் சிங்களச் சொல்லென்றும், தங்களைப் பார்த்துத் தமிழர் 'காப்பி' அடிப்பதாகவும் சிங்கள கலாசார ஆராய்ச்சி நிபுணர்கள் கண்டுபிடிக்கக்கூடும்!

இது எப்படியாயினும் தமிழர் தங்கள் சமையல் கலையையும் உலக மக்களுக்கு கற்பித்துத் தொண்டுபுரிய எவ்வளவோ இடமுண்டு.

ஃ ஃ ஃ

ஒரே உப்பு, புளி, மிளகாய்தான். ஆனால் ஒவ்வொரு தாய்மார் சமைப்பதும் வெவ்வேறு விதம். வெவ்வேறு ருசி. சமையல் ஒரு பெரிய கலை. நமது பெண்மணிகள் உதவாக்கரைக் கல்லூரிப் படிப்பில் காட்டும் ஊக்கத்திலே ஒரு பகுதியையாயினும் சமையல்கலை பயிலச் செலவழித்தால், அவர்களுக்குக் குடும்பவாழ்க்கையில் எவ்வளவு அநுகூலப்படும்! வெறும் புத்தகப் படிப்பு மட்டும் படித்த மனைவியைவிட, நன்றாக, ருசியாக அன்புடன் சமைத்துப் போடக்கூடிய மனைவியைப் பெற்றவர் உண்மையில் பாக்கியவான்கள் அல்லவா?

ஃ ஃ ஃ

காண இனியது நீறு
கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கெல்லாம்
பெருமைகொடுப்பது நீறு
மாணந்தகைவது நீறு
மதியைத் தருவது நீறு
சேணந்தருவது நீறு
திரு ஆலவாயான்திருநீறே.

—திருஞானசம்பந்த சுவாமிகள்.

[மாணம் - மாண்பு; தகை-மேம்பாடு; சேணம் - விண்ணுலக இன்பம்.]

## உலக மதக்காங்கிரஸ் போஷகராக ராதாகிருஷ்ணன்

லண்டன், செப். 16

உலக மதக்காங்கிரஸ் போஷகராகப் பதவியேற்கும்படி காங்கிரஸ் விடுத்துள்ள வேண்டுகோளை இந்திய ஜனாதிபதி டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஏற்றுள்ளதாகக் காங்கிரஸின் மகாநாட்டு முடிவில் அதன் தலைவர் சொரென்ஸன் பிரபு அறிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை பஸ்சேவையை மாணவர் அதிகம் விரும்பவில்லை

## இந்தநிலை நீடித்தால் அந்தசேவை ரத்தாகலாம்

யாழ்ப்பாணம், சனி

பாடசாலை பஸ்சேவையை மாணவர்கள் பயன்படுத்தாவிட்டால், அச்சேவை ரத்துச்செய்யப்படும். இப்படியான ஒரு அறிவித்தல் இலங்கை போக்குவரத்துச்சபையிடமிருந்து பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மாணவர்களில் குறிப்பாக உயர்வகுப்பில் படிப்பவர்கள், பாடசாலை பஸ் சேவைகளில் பிரயாணம் செய்வதைத் தவிர்த்து வருகிறார்களென்றும், சாதாரண பஸ்களில், மற்றும் பிரயாணிகளுடன் நெருக்கமாகப்பிரயாணம் செய்வதையே விரும்புகிறார்களென்றும் பஸ்ஊழியர் ஒருவர் தெரிவித்தார்.

சாவகச்சேரியிலிருந்து காலை 7-45 மணிக்கு புறப்படும் பாடசாலை சேவை பஸ்ஸில், அது இரட்டைத் தட்டு பஸ்ஸாக இருந்தும் தினமும், பத்துக்குக் குறைவான மாணவர்களே செல்கிறார்களென்றும், அதன்பின் 7-55 மணிக்கு வரும் சாதாரண பஸ்ஸில், தினமும் இருபதிற்கு அதிகமான மாணவர்கள் பிரயாணம் செய்கிறார்களென்றும், பஸ் கண்டக்டர் ஒருவர் கூறினார். இதனால் சாவகச்சேரிக்கும், யாழ்ப்பாணத்திற்கு மிடையில் உள்ள பஸ்தரிப்பு நிலையங்களில்பிரயாணிகள் அதிக நேரம் காத்திருக்கிறார்கள் என்றும், சில சமயங்களில் உத்தியோகத்தர்களையும், நோயாளிகளையும், வியாபாரிகளையும் ஏற்றிச் செல்லாமல் விடுகின்றனரென்றும் ஒருபிரயாணி தெரிவித்தார்.

பாடசாலை சேவையாக இரட்டைத்தட்டுபஸ் விடப்படுகிறதென்றும், இதில் மாணவர்கள் சௌகரியமாக பிரயாணம்செய்யமுடியும் என்றும், அத்துடன் நேரத்திற்குப் பாடசாலை செல்ல முடியுமென்றும், பாடசாலை வாசல்களிலேயே இறங்க முடியுமென்றும், இவற்றையெல்லாம் புறக்கணித்து, மற்ற பஸ்களில், மிகவும் நெருக்கமாக நின்று கொண்டு மாணவர் பிரயாணம் செய்வதால், மற்றும் பிரயாணிகள் கஷ்டத்துக்குள்ளாகின்றனரென்றும், ஒரு கல்லூரி ஆசிரியர் அபிப்பிராயம் தெரிவித்தார்.

சாவகச்சேரியிலிருந்து பாடசாலை சேவைபஸ். ஏற்கனவே காலை 7-30மணிக்கு புறப்பட்டு வந்ததென்றும், இது மாணவர்களுக்கு வசதியில்லையென்று கூறப்பட்டதால், காலை 7-45 மணிக்கு பாடசாலை சேவை பஸ் புறப்பட ஒழுங்கு செய்யப்பட்டதாகவும், இலங்கை போக்குவரத்துச்சபை அதிகாரி ஒருவர், இதுபற்றி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

மாணவர்கள், பாடசாலை பஸ்சேவையைப்புறக்கணித்தால், அச்சேவை ரத்துச் செய்யப்படுவது தவிர்க்க முடியாதென்றும் அந்த அதிகாரி கூறினார்.

## எழுத்தாளர் கடமை

கலகொடை, வெள்ளி

நாட்டில் சோஷலிஸவாழ்வு மலர எழுத்தாளர்கள்உதவ வேண்டும். எழுத்தாளர்கள் இதுவிஷயத்தில தமதுகடமையை நன்குணர்ந்து செயல்படவேண்டும்.' என்றும் மகாரை எம். பி. திரு. எஸ். கே. சூரியாராச்சி தலகொடையில் நடைபெற்ற சாகித்திய இசை விழாவில் பேசுகையில் கூறினார்.

மக்களின் மனதையும் அவர்களது அபிலாஷைகளையும் அறிந்து எழுத்தாளர்கள் எழுதவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## சர்வதேச சங்கீதக்காங்கிரஸ்

லயிப்சிக், செப் 16

ஒரு சர்வதேச சங்கீதக் காங்கிரஸ் லயிப்சிக்கில் இம்மாதம் 19-24ம் திகதிகளில் நடைபெற்றும்.

பல்வேறு நாடுகளைச் சேர்ந்த பிரபல சங்கீத மேதைகள் இதில் கலந்து கொள்வார்கள், மூன்று கருத்தரங்குகளும் நடைபெறும். சுமார் 70 விரிவுரைகள் காங்கிரசில் நிகழ்த்தப்படும்.

## தேசிய சுவீப்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தலா 522 ரூபா பரிசுபெறும் 100 டிக்கட்டுகள்.

| | |
|---|---|
| 27 Z 0471 | 37 B 0124 |
| 22 W 0132 | 33 M 0918 |
| 09 B 0908 | 20 M 0373 |
| 19 E 0394 | 09 H 0688 |
| 14 Z 0672 | 04 J 0781 |
| 01 S 0498 | 13 S 0552 |
| 04 Q 0966 | 15 O 0545 |
| 29 H 0473 | 22 Z 0619 |
| 25 E 0424 | 09 P 0794 |
| 10 B 0488 | 09 B 0360 |
| 17 L 0161 | 19 T 0117 |
| 26 Z 0122 | 38 R 0767 |
| 14 H 0028 | 41 D 0238 |
| 03 B 0264 | 41 W 0734 |
| 13 G 0691 | 41 E 0610 |
| 12 K 0050 | 34 V 0237 |
| 28 A 0910 | 10 T 0148 |
| 14 N 0554 | 25 C 0803 |
| 30 E 0826 | 02 Y 0050 |
| 13 J 0612 | 27 X 0992 |
| 32 P 0807 | 35 R 0582 |
| 35 X 0356 | 31 D 0086 |
| 26 D 0383 | 12 N 0275 |
| 29 U 0613 | 02 L 0063 |
| 37 M 0752 | 28 Q 0089 |
| 06 R 0509 | 25 F 0871 |
| 27 C 0639 | 38 A 0803 |
| 40 F 0454 | 12 H 0736 |
| 11 B 0328 | 16 F 0747 |
| 14 F 0669 | 31 R 0376 |
| 17 K 0176 | 29 J 0220 |
| 39 W 0606 | 15 M 0480 |
| 14 V 0790 | 36 H 0045 |
| 31 D 0524 | 03 L 0146 |
| 26 M 0969 | 13 P 0484 |
| 12 A 0620 | 15 F 0386 |
| 24 Y 0526 | 18 A 0679 |
| 22 T 0294 | 32 T 0693 |
| 03 E 0357 | 13 M 0238 |
| 37 S 0842 | 03 Q 0907 |
| 14 B 0636 | 26 W 0263 |
| 01 R 0402 | 14 S 0589 |
| 01 G 0835 | 40 F 0620 |
| 29 X 0221 | 09 B 0493 |
| 23 N 0157 | 13 N 0755 |
| 09 R 0275 | 22 P 0810 |
| 26 E 0381 | 35 N 0677 |
| 31 T 0283 | 29 U 0329 |
| 29 F 0040 | 17 J 0982 |
| 24 T 0921 | 10 T 0060 |

## ஜே. ஆர். வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டதா?

### சதி வழக்குவிசாரணையில் வழக்கறிஞர்கேள்வி

கொழும்பு, வெள்ளி

தொடம்பே முதலாளியின் மரணம் சம்பந்தமாக புதிய தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் வாக்குமூலத்தைப் பொலிசார் பதிவுசெய்துவிட்டனரா என்று சதிவழக்கு விசாரணை இன்று ஆரம்பமாகியபொழுது, நான்காது எதிரியின் வழக்கறிஞரான திரு. திஸ்ஸ விஜயரத்னா கேட்டார்.

சதிவழக்கு விசாரணை என்ற இந்தச் சோக நகைச்சுவை நாடகத்தை முடிக்குரிய வழக்கறிஞர் தொடர்ந்து நடாத்தவிரும்புகிறாரா என்பதைத் தான் அறிய விரும்புவதாகவும் அவர் கூறினார்.

சதி வழக்கு சம்பந்தமான விசாரணைக்குமுழுப்பொறுப்பும் கொண்டிருந்தவர் திரு. ஜே ஆர். ஜெயவர்த்தனாவே. அத்துடன் எதிரிகளைக்கொலைசெய்தாவது வழக்கைத் தயாரிக்கும்படி திரு ஜெயவர்த்தன கூறியதாக இன்ஸ்பெக்டர் ராகுல சில்வாஹொராதொழுவிடம் தெரிவித்த வாக்குமூலங்களும் உண்டு.

அதிகாரத்தைக்கைப்பற்ற திரு. ஜெயவர்த்தன முயற்சித்ததாக இராணுவ முகாமில் வதந்தி பேசப்பட்டது.

சதிவழக்கு விசாரணையில் ஈடுபட்ட அதே உத்தியோகத்தர்களிடம் புதிய தொடம்பே முதலாளி கொலைவழக்கு விசாரணையைப் பொறுப்பளிப்பது பாதுகாப்பான முறையாகாது.

இவ்வாறு கூறிய திரு. திஸ்ஸ விஜயரத்ன, புதிய வழக்கைப்பற்றி டட்லி. ஜே. ஆர்., அமீர், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் மற்றும் சட்ட அதிகாரிகளும் சந்தித்துப் பேசியதாகத் தமக்குத்தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய கொலைவழக்கு விசாரணையை நடாத்த இப்பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் அனுமதிக்கப்பட்டால், விசாரணை பாரபட்சமின்றி அமையுமோவென்பது எதிர்த்தரப்பு வழக்கறிஞருக்குச் சந்தேகமே என்றும் அவர் கூறினார்.

'இந்த நீதிமன்றத்தில் நடப்பவற்றுக்கான அதிகாரமே எனக்குண்டு' என்று நீதிவான் பதிலளித்தார்.

## கொள்கையை கண்டிக்கும் ஆசிரியர் கவனம்

கொழும்பு, வெள்ளி

அரசாங்கத்தின் கல்வி கொள்கைகளை கண்டிக்கும் ஆசிரியர்கள் மீது நடவடிக்கையெடுக்கும்படி கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்ற கூட்டங்களில் ஆசிரியர்கள் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையை வலுவாக கண்டித்துள்ளாரென்று மந்திரியின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

சேவையிலிருக்கும் ஆசிரியர்களும் தற்காலிகமாக வேலை நீக்கம்செய்யப் பட்டவர்களுமா கண்டனக்கூட்டங்களில் பங்குபற்றுகின்றார்களென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கல்வி மந்திரியின் புதிய உத்தரவு

கொழும்பு, சனி

உயர்கல்வி மசோதா அமுலாகும்வரை பல்கலைக்கழகங்களில் கடமையாற்றும் போதனாசிரியர்களின்சேவைகளை நிறுத்தவோ அல்லது புதிய நியமனங்களைச் செய்யவோ வேண்டாமென்று பல்கலைக்கழகத் தலைவர்களுக்கு அறிவிக்குமாறு கல்வி டைரக்டரிடம் கல்வி அமைச்சர் திரு. ஐ எம். ஆர் ஏ இரியகொல்ல உத்தரவிட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

## பத்துப் பிள்ளைகளின் தந்தை கொலை

காலி, சனி

காலிப்பகுதியில்10 பிள்ளைகளுக்குத் தந்தையான 45 வயது ஏ. டபிள்யூ குணரத்ன என்பவர் குத்திக் கொலைப்பட்டார். இது சம்பந்தமாக கே. ஹினி அப்புஹாமி என்பவர் கைது செய்யப்பட்டு கோர்ட்டில் ஆஜர் செய்யப்பட்டார்; இம்மாதம் 19 ம் திகதிவரை அவரை விளக்க மறியலில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார்.

## தேயிலைவிலை வீழ்ச்சி

### அரசாங்கம்பரிசீலனை

கொழும்பு, வெள்ளி

அரசாங்கபார்லிமெண்டரிக்குழு நேற்றுகூடியபொழுது தேயிலைவிலை வீழ்ச்சி பற்றி நீண்டநேரம் விவாதிக்கப்பட்டது. தேயிலைவிலை வீழ்ச்சிபற்றியும் அதனால்எடுக்க வேண்டிய நடவடிக்கைபற்றியும் மந்திரிசபை உபகமிட்டியும்இன்றுநீண்ட நேரம் ஆராய்ந்தது.

## இலங்கைக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்திச் செலவுகளை மனதிற்கொள்ளாமல் சர்வாதிகாரமான முறையில் படங்களின் விலைகள் நிர்ணயிக்கப்படுவதுபற்றி இந்திய படத்தயாரிப்பாளர்கள் துக்கம் தெரிவித்தனர். படங்களின் விலைகள் இலங்கையில் அவை தரும் வருவாயைப் பொறுத்திருக்க வேண்டுமென்று அவர்கள் கூறியுள்ளனர்.

இதற்கிடையில், இந்திய ரூபாய் மதிப்புக்குறைக்கப்பட்டபின்னர், இந்தியாவிலிருந்து பொருட்களை வாங்குவதை இலங்கை ஏறத்தாழ நிறுத்திவிட்டது. இது ஏனெனில், இந்தியாவிலிருந்து வாங்கப்படும்பொருட்களின் விலை, ரூபாய் மதிப்புக்குறைவுக்கு முன் நிலவிய விலைகளுக்குச் சமனாக அமையவேண்டுமென்று இலங்கை வற்புறுத்தியுள்ளது.

ரூபாய் மதிப்புக் குறைவுக்குமுன் நிலவிய விலைகளின் பிரகாரமென்றால் தான், இறக்குமதியாளர்கள் இந்தியாவுக்குப் பணம் அனுப்ப அனுமதிக்கப்படுவார்களென செலாவணிக் கட்டுப்பாட்டதிகாரி இறக்குமதியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் ரூபாய் மதிப்புக்குறைவிலிருந்து லாபமடைய இலங்கை முயற்சி செய்வதாக இந்திய [illegible]த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## தென் பகுதி அசைஸ் விசாரணை ஆரம்பம்

### ஸ்பென்சர் கொலைவழக்கு இன்று விசாரணை

காலி, வெள்ளி

1966.ம் ஆண்டுக்கான தென்பகுதி இரண்டாவது பருவகால விசாரணை நேற்று நீதியரசர் திரு. வி. மாணிக்கவாசகர் தலைமையில் ஆரம்பமானது.

விசாரணை ஆரம்பமாவதற்கு முன் நீதியரசர் பரிவாரங்களுடன் காலி களுவெலவிலுள்ள ஸ்ரீ மீனாட்சிசுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று விசேஷ வழிபாடுகளில் கலந்துகொண்டார்.

இப்பருவகால விசாரணையின்போது 12 வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும். மேலும் சில வழக்குகள் இப்பருவகால விசாரணையில் சேர்க்கப்படுமெனத் தெரியவருகிறது.

தென்பகுதி பிஸ்கால் அதிகாரியான காலி அரசாங்க அதிபர் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படவிருக்கும் வழக்குகளின் விபரங்களை நீதியரசரிடம் கையளித்தார். காலி உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டரின் தலைமையில் பொலிசாரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. காலி அஸைஸ் நீதிமன்ற லிகிதராகக் கடமையாற்றும் திரு. பசுபதி என்பவர் விசாரணையின் போது மொழிபெயர்ப்பாளராகக் கடமையாற்றுவார்.

மாத்தறையில் மேலதிக அஸைஸ் விசாரணை பொன்றும் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மாத்தறை அஸைஸ் நீதிமன்றத்தில் ஸ்பென்சர் ராஜரத்தினம் கொலை வழக்கு நாளைக் காலை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

## டபிள்டெக்கருள் மயிர் கொட்டி

வவனியா, வியாழன்

யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமத்துக்கு போக்குவரத்துச்செய்யும் டபிள்டெக்கர் பஸ்கள்சிலவற்றில் இப்போதுமயிர்கொட்டிபுழுக்கள் காணப்படுவதாகவும் இதனால் பிரயாணிகள் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாக வேண்டியிருப்பதாகவும் அறியப்படுகிறது. வீதிகளின் கரையோரங்களில் வளர்ந்திருக்கும் கதியால்களிலிருந்து டபிள்டெக்கர் மேல்தட்டினூடாக இவை உள்ளே வருகின்றனவாம்.

## இடமாற்றம்

சங்கானை, வெள்ளி

சங்கானைபட்டினசபையில் கடமையாற்றும் வருமான வேலை உத்தியோகஸ்தர் திரு சி. சரவணமுத்து அடுத்த மாதம்தொடக்கம் புத்தூர் கிராமசபைக்குமாற்றப்பட்டுள்ளார்.

இவர்சங்கானைப் பட்டின சபையில் கடந்த [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயமுறுத்தல் வழக்கில் எதிரிகள் இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம், வெள்ளி

முரசுமோட்டை பயமுறுத்தல் வழக்கு நேற்றுக்காலை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு றொபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூன் மாதம் 30-ம் திகதி முரசுமோட்டையில் பரராஜசிங்கம் நவநீதராசா, செல்லன் குணரத்தினம் ஆகியோர் மாணிக்கத்தின் வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து, துப்பாக்கியுடன் சென்று முருகனைப் பயமுறுத்தியதாகவும் பாறுப்பிள்ளையை பயமுறுத்தியதாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

பாறுப்பிள்ளை சாட்சியமளிக்கும்போது சம்பவம் நடந்த தினம், எதிரிகள் வந்து கதவைத் தட்டினார்கள் என்றும் துப்பாக்கியை நீட்டி பயமுறுத்தினார்கள் என்றும் கூறினார்.

எதிரிகள் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் பாறுப்பிள்ளையின் மகள் பரமேஸ்வரியுடன் 1-ம் எதிரி சிநேகிதமென்றும் அதைத் தடுப்பதற்காக பொய் வழக்கை எல்லோரும் சேர்ந்து சிருஷ்டித்திருக்கிறார்களென்றும் கூறினார்.

விசாரணையின் பின் மாஜிஸ்திரேட் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் அட்வகேட் கே. வி. என். சண்முகநாதன், புறக்டர்களான ஆர். டி. சிவகுரு, வி. செல்லத்தம்பி ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார்.

வழக்காளி தரப்பில் அட்வகேட் எஸ். ஜெயசிங்கம், புறக்டர் எஸ். பி. மயில்வாகனத்தின் அனுசரணையுடன் ஆஜரானார்.

---

# உள்ளூராட்சிச் சேவை தேசிய சேவையாகும்

கொழும்பு, சனி

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் எஞ்ஜினியரிங் பட்டதாரிகளைப் பொறுத்த வரையில், உள்ளூராட்சிச் சேவை ஓர் தேசிய சேவையாகக் கருதப்படுமென அறிவிக்கிடக்கிறது.

இந்த மாற்றத்துக்கு ஏற்ற வகையில் பொதுச் சேவை மசோதா திருத்தியமைக்கப்படும்.

தற்போது, உள்ளூராட்சி அரசாங்க சேவை தேசிய சேவையாகக் கருதப்படுவதில்லை. புதிய கொள்கை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், எல்லா எஞ்ஜினியரிங் பட்டதாரிகளும் பொதுச் சேவையில் ஐந்து வருடங்கள் கடமையாற்றவேண்டியிருக்கும், பொதுச்சேவையில் கடமையாற்றுவது என்றால், அது உள்ளூராட்சித் துறையிலும் சேவை செய்வது என்று அர்த்தமாகும்.

---

# பரந்தன் - முல்லைத்தீவு பஸ்சேவை

கிளிநொச்சி, வெள்ளி

பரந்தன்-முல்லைத்தீவு பஸ் சேவையை அடுத்த மாதம் முதல்தேதி தொடக்கம் ஆரம்பிக்குமாறு இலங்கைப் போக்குவரத்துச் சபை முகாமையாளரைக் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் வேண்டியுள்ளார். இவ்வீதிகளை நேரில் சென்று பார்வையிட்டுவந்த பின்னர் பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் 12 மைலுக்கும் 17ம் மைலுக்குமிடையில் உள்ள வீதி பஸ் போக்குவரத்துச் செய்வதற்குத் தகுதியற்றதாக இருப்பதால் அதைத் திருத்தும்படியும் பகிரங்க பொதுவேலைப் பகுதிக்கும், பிரதம பொறியியலாருக்கும் தெரிவித்துள்ளார். இதற்குப் பகிரங்க பொதுவேலைப் பகுதியினர் இவ்வேலையை அடுத்த மாதம் முதலாந் தேதிக்குள் முடித்துத் தருவதாகத் தெரிவித்துள்ளனர்.

---

# இன்று புத்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், சனி

ஈழத்து எழுத்தாளர்களின் புத்தகக்கண்காட்சி யாழ் இலக்கிய வட்டத்தின் சார்பில் இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் யாழ் பொதுசன நூலகத்தில் இவை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்படும்.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் வாழும் கலை கலாச்சாரப் பண்புகளை அவ்வப்பகுதிகளின் பண்பாடுகள் மிளிரத்தக்க வகையில் எழுதிய ஈழத்து எழுத்தாளர்களின் 500 புத்தகங்கள் காட்சியில் இடம்பெறுகின்றன.

கண்காட்சிக்குரிய புத்தகங்களில் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பண்பாட்டு வரலாறுகளும் நவீன நாகரீக பண்புகளும் உள்ளடங்கிய சமயம் வைத்தியம் நாடகம். கவிதை, கட்டுரை நாவல், சிறுகதை, சுயசரிதை முதலியனவும் ஏட்டுச்சுவடிகளும் இடம் பெறுகின்றன.

---

# ஜீவனாம்சம் கோரி வழக்கு

வல்வெட்டித்துறை, வெள்

கரவெட்டி மேற்கைச்சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சுப்பிரமணியம் என்பவர் தான் ஒரு ஆசிரியர் என்றும் தனக்கு மாதாந்தம் 265 ரூபாவுக்கு மேல் தான் கிடைப்பதாகவும் தனது பிள்ளைக்கு மாதமொன்றுக்கு 30 ரூபா படி கட்டி வருவதாகவும் வெளியிடத்தில் தொழில் செய்து வருவதால் தனது வருமானத்தில் அதிக செலவு ஏற்படுகிறதென்றும் அதைத் தவிர பெற்றோர்களைப் பார்க்கவேண்டிய நிர்ப்பந்தம் தனக்கு இருக்கிறதென்றும் ஆகையால் தனது மனைவியான இராசமணிக்கு மாதமொன்றுக்கு 30 ரூபாவுக்கு மேல் கட்ட இயலாதென்றும் இராசமணி என்ற பெண்மணி பருத்தித்துறைக் கோட்டில் தனக்கு ஜீவனாம்சம் கோரி தொடர்ந்த வழக்கின் விசாரணையின்போது தெரிவித்தார்.

இவ்வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு றொபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

நீதிபதி மேல்விசாரணையை இம்மாதம் 23-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

# பொத்துஹார வழக்கு

கொழும்பு, சனி

பொத்துஹார கற்பழிப்பு வழக்கில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவரால் கற்பழிக்கப்பட்டதாகக் கூறப்பட்டும் எதிரிசிங்கே கமலாவதி என்பவர் நேற்றுமுன்தினம் கொழும்பு கூட்டு நீதவான் திரு. பேட்ராம் சேனரத்னவின் முன்னிலையில் ஆஜராகி, இருதாரக்குற்றத்தை ஒப்புக்கொண்டார்,

எச். பி. கருணாரத்ன என்பவரைக் கணவனாக வைத்திருக்கும் போதே. பி. ஏ. பொடி அப்புஹாமி என்பவரைக் கமலாவதி மணம் செய்து கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

கமலாவதியின் மாமியார் ரொஸ்லின் எதிரி சிங்கவை உறுதி நிற்பவராக வைத்து, கமலாவதியை இரு வருடங்களுக்கு 1000 ரூபா நன்னடத்தைப் பிணையில் கொழும்பு மாவட்ட நீதவான் உத்தரவிட்டார்.

---

# மாடியிலிருந்து குதித்து நோயாளி மரணம்

கொழும்பு, சனி

கொழும்பு கண்ணாஸ்பத்திரியில் உள்ள நோயாளி ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை 2 மணியளவில் மூன்றும் மாடியிலிருந்து கீழே பாய்ந்து தமது உயிரை மாய்த்துக்கொண்டார். இந் நோயாளி கோட்டையைச் சேர்ந்த ஈ. எம். அப்புஹாமி ஆவர்.

இவ்வருடம் கண்ணாஸ்பத்திரி மாடிக்கட்டிடத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டவர்கள் தொகை இத்துடன் மூன்றாக உயர்ந்துள்ளது.

கடந்தவருடம் நான்கு நோயாளிகள் இவ்விதம் தற்கொலை செய்துகொண்டனர்

---

# புளிவிற்க மறுத்தவருக்கு ரூபா 250 அபராதம்

முல்லைத்தீவு, வெள்ளி

பேதுருப்பிள்ளை மரியநாயகம் என்பவர் புளிவிற்க மறுத்த குற்றத்திற்காக முல்லைத்தீவு மாஜிஸ்ரேட் திரு. பரமகுரு அவருக்கு ரூ 250 அபராதம் விதித்தார்.

# இங்கே விறகில்லை

சங்கானை, வெள்ளி

சங்கானையில் இருக்கும் அரசினர் மரக்காலையில் விற்பனைக்கு விறகு இல்லை. இதனால் அதையே நம்பி வாழும் பொதுமக்கள் எத்தனையோ மைல்களுக்கப்பால் இருந்து வண்டிகளையும் கொண்டுவந்து மனமுடைந்தவர்களாகத் திரும்பிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

# சப்பாத்துத் தொழிலுக்கு கஷ்டம்!

உடுப்பிட்டி, வெள்ளி

''கடந்த 75 வருடங்களாக நாம் சப்பாத்துத் தயாரிக்கும் கூட்டுறவு சப்பாத்துத் தொழிற்சாலையொன்றை நடாத்தி வருகின்றோம். ஆனால். இன்றைய அரசாங்கம் மூலப் பொருட்களுக்குத் தடை போட்டுள்ளதால் எமது ஸ்தாபனம் விரைவில் மூடப்படவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. எமது வாழ்க்கை வளம்பெற நடவடிக்கை எடுத்துதவுங்கள்'' என்று கோரும் மகஜரொன்றை வதிரி கூட்டுறவு சப்பாத்துத் தொழிற்சாலையினர் திரு. பீட்டர் கெனமனிடம் கையளித்துள்ளனர்.

---

# பிரசவ விடுதி நிறுவ முயற்சி

சுழிபுரம், வெள்ளி

தற்போது இருக்கும் பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலையுடன் இணைந்த ஓர் பிரசவ விடுதியை நிறுவும் வேலைகளை கவனிக்குமாறு பண்டத்தரிப்பு கிராம சபையினர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வேண்டியுள்ளனர் பிரசவ விடுதியின் அவசியம்பற்றியும் அப்பகுதி மக்கள் அடையும் கஷ்டம் பற்றியும் சுகாதாரப் பகுதியின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

---

# இன்னும் நிலைமை சரியாகவில்லை

கொழும்பு, வெள்ளி

கடந்தவாரம் ஏற்பட்டபுயலின் காரணமாக கிழக்கு மாகாணத்திற்கும் மற்ற இடங்களுக்குமான சாதாரண போக்குவரத்து தொலைபேசித் தொடர்புகள் பழைய நிலைமைக்கு வரவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது. நிலைமை சீரடைய இன்னும் ஒரு வாரம் செல்லுமெனத் தெரிய வருகிறது.

---

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## சுற்றுப்பயணம்

தமிழ்நாட்டில் 3 வாரங்களாக சூறாவளிச்சுற்றுப் பயணம் செய்த முதலமைச்சர் பக்தவத்சலம் பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பினார்.

ஃ ஃ ஃ

## ஓய்வு

உடல்நலம் இல்லாதிருக்கும் ராஜாஜி ஒரு மாத முழு ஓய்வு எடுப்பார்.

ஃ ஃ ஃ

## 37 விடுதிகள்

தமிழ் நாட்டில் மேலும் 37 விடுதிகள் ஏழைமாணவர்களுக்கு அமைக்கப்படும் என மந்திரி கக்கன் கோவையில் தெரிவித்தார்.

ஃ ஃ ஃ

## திருட்டு

ரெயிலில் தூங்கிக்கொண்டுபிரயாணம் செய்த ஈரோபடைச்சேர்ந்த ஒரு வியாபாரியிடம் ரூ 10 ஆயிரம் திருட்டு போய்விட்டது. பொலிசார் திருடியவரைத் தேடுகின்றனர்.

ஃ ஃ ஃ

## பச்சைத்துரோகிகள்

'கம்யூனிஸ்டுகள் பச்சைத் துரோகிகள். அவர்களுடன் போய் தி. மு. கழகத்தினர் கூட்டுச்சேர்கின்றனர். இது மக்கள் நன்மைக்காக அல்ல' என்று முதல்மந்திரி பக்தவத்சலம் தர்மபுரி காங்கிரஸ் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

ஃ ஃ ஃ

## பலத்த எதிர்ப்பு

தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு பலத்த எதிர்ப்பு இருக்கிறது. எதிர்க்கட்சிகள் ஒற்றுமையுடன் ஒன்றுசேர்ந்து எதிர்ப்பு அணி அமைத்தால் காங்கிரசை ஆட்சிப் பீடத்தில் இருந்து அகற்றுவது நிச்சயம் எனப்பொள்ளாச்சியில் திரு. அண்ணாதுரை கூறினார்.

## விடுதலை

சென்னை கோட்டைமுன் நடந்த ஆர்ப்பாட்டத்தில் கைதுசெய்யப்பட்ட ஜனசங்கத்தைச் சேர்ந்த தலைவர் உட்படபத்துப்பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

---

# புரோக்கின் ஹில்லில் பூமியதிர்ச்சி

சிட்னி, செப். 16

சிட்னியிலிருந்து 700 மைல் தூரத்திலுள்ள புரோக்கின்ஹில் எனப்படும் இடத்தில் மெல்லிய பூமி அதிர்ச்சி ஒன்று ஏற்பட்டது. ஒரு சில விநாடிகளுக்கு இது நீடித்தது. (பி. டி. ஸி)

---

# போக்குவரத்து வசதிகள் விஸ்தரிப்பு

## பொருள்களின் விலை குறையும்

கொழும்பு, வெள்ளி

அடுத்த ஐந்தாண்டு காலத்தில் இந்நாட்டின் போக்குவரத்து வசதிகள் விஸ்தரிக்கப்படும். பொருள் பண்டங்களை ஓரிடத்திலிருந்து பிறிதோர் இடத்துக்குக் கொண்டு செல்வதில் உள்ள குறைபாடுகளை அகற்றவே இவ்விஸ்தரிப்பு மேற்கொள்ளப்படும்.

போக்குவரத்து வசதியின்மை காரணமாகவே மரக்கறி போன்ற பொருட்களின் விலை அதிகரித்துள்ளது என்றும், போக்குவரத்து வசதிகளை விஸ்தரிப்பதன் மூலம் இப்பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்த முடியுமென்றும் பொருளாதாரத் திட்டசபை சிபாரிசு செய்துள்ளது.

புதிய குடியேற்றத் திட்டங்களுக்கும் போக்குவரத்து வசதிகள் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றும் சபை மேலும் சிபாரிசு செய்துள்ளது.

திட்டசபையின் சிபாரிசுகளை விசேஷ உபகுழு ஒன்று ஆராய்ந்து வருகிறது.

---

# இந்தோனேஷியாவுக்கு பாகிஸ்தான் நிதியுதவி

ராவல்பிண்டி, செப். 16

சணல் பொருட்கள், பருத்தி மற்றும் துணிமணிகள் வாங்குவதற்கென இந்தோனேஷியாவுக்கு ஐம்பது லட்சம் டொலர் கடனுதவி அளிக்க பாகிஸ்தான் ஒப்புக்கொண்டுள்ளது.

(பி. டி. ஸி.)

---

# வரவேற்பளிக்க தீர்மானம்

சுழிபுரம். வெள்ளி

இம்மாதம் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கும் தபால், தந்தி அமைச்சர் கௌரவ திரு- மொன்டேக் ஜயவிக்கிரமாவிற்கு ஓர் வரவேற்பு உபசாரம் அளிக்க அகில இலங்கை தமிழ் பேசும் தபால் அதிபர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

---

# வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதி

கொழும்பு, வெள்ளி

வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதியை ஓர் கூட்டுத்தாபனத்தின் அமைப்புக்குள் கொண்டு வரும் நோக்கத்துடன் கூடிய ஓர் மசோதாவை சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பார்லிமெண்டில் சமர்ப்பித்துள்ளார். ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் மசோதாவை அனுமதித்தார்.

வடமாகாண ஆசிரியர்களிடையே சேமிப்பை வளர்ப்பதும், பொருளாதாரக் கஷ்டத்திலுள்ள அங்கத்துவர்களுக்கு உதவி அளிப்பதும், ஓய்வு, மரணம் இவற்றின்போது அளிக்கப்படும் சகாயம் மூலமாக அங்கத்தவர்களின் குடும்பத்தினருக்குநிதிஉதவி அளிப்பது ஆகியவையும் இக்கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களில் சிலவாகும்.

---

# 'சங்கீத ஆசிரியர்களை நியமிக்குக'

கிளிநொச்சி, வெள்ளி

கிளிநொச்சித் தொகுதியில் உள்ள பாடசாலைகளுக்கு இதுவரைசங்கீத ஆசிரியர்களை நியமிக்காத காரணம் பற்றியும் இப்பொழுது புது நியமனம் வழங்கப்பட்டபோதிலும் கிளிநொச்சித் தொகுதிக்கு ஒரு சங்கீத ஆசிரியரையும் நியமனம் செய்யாததினால் உடனடியாகக்கவனம் எடுத்து இப்பகுதிக்கு குறைந்தது மூன்று சங்கீத ஆசிரியர்களை நியமிக்குமாறு கோரியும் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம் உதவி வித்தியாதிபதி திரு. டி. எப். ஹெட்டி ஆராச்சியைத் தந்தி மூலமும், கடித மூலமும் கேட்டுக் கொண்டுள்ளார்.

சென்ற மாதம் முதல் திகதி தொடக்கம் வடமாகாணத்துக்கு நியமிக்கப்பட்ட சங்கீத ஆசிரியர்களின் தொகையையும் அத்திகதி தொடக்கம் வடமாகாணத்தில் உள்ள ஒவ்வொரு தேர்தற்தொகுதிக்குப் நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் தொகையையும் தமக்கு அறிவிக்குமாறும் அவர் வேண்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'குறிகாட்டுவான் பகுதியை கடலரிப்பிலிருந்து காப்பாற்றுக'

புங்குடுதீவு, வெள்ளி

குறிகாட்டுவான் வடகிழக்குப்பகுதியைக் கடல் அரிப்பிலிருந்து தவிர்ப்பதற்கும் போக்குவரத்தினால் நெடுந்தீவு - நயினாதீவு குறிகாட்டுவான், புளியடித்துறை கழுதைப்பிட்டி - கேரதீவு-ஊரதீவு மடத்து வெளியை ஒன்றுக்கி பஸ் சேவையின் தூரத்தைக் குறைக்கச் செய்து பிரயாணிகளின் வசதிக்காக குறிகாட்டுவான் இறங்கு துறைமுகத்திலிருந்து புளியடித்துறையை வீதியொன்றின் மூலம் இணைத்துத்தருமாறு பொது மராமத்துப் பகுதியினரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் குறிகாட்டுவான் நடுத்துருத்தி கிராமமுன்னேற்றச் சங்கக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மேற்படி சங்கத்தின் விசேஷ பொதுக்கூட்டம் தலைவர் திரு. சின்னத்துரை தலைமையில் நடைபெற்றபோதே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவேற்றப்பட்ட மற்றும் சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:

நெசவு நிலையம் அமைக்க அரசாங்கத்திடம் சகல உதவியையும் நாடுதல்.

பெண்பிள்ளைகளின் பொருளாதார நலனை முன்னிட்டு தையல்நிலையம் ஒன்றை இப்பகுதியில் அமைத்தல்.

## கலைஞர்களுக்கு கௌரவப் பட்டம்

### ஞானசம்பந்தர் ஆதீனம் வழங்கியது

திருநெல்வேலி, வெள்ளி

நல்லூர்க் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு நல்லை ஞான சம்பந்தர் ஆதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகளால் தொடர்ந்து நடாத்தப்பட்டு வந்த 'திருவிளையாடல்' சமிதை விரிவுரை தீர்த்தோற்சவ தினத்துடன் முடிவுற்றது. பிரசங்க ஆரம்பத்தில் தேவஸ்தான சார்பில் தம்பிரான் சுவாமிகளுக்கு காவி உடையும், காளாஞ்சியும் வழங்கி மரியாதை செலுத்தப்பட்டார்கள்.

இப்பூர்த்தி விழாவில் ஆசிரியர் திரு. சம்பந்தருக்கு ''வித்யா விசாரத்'' என்ற பட்டமும், நல்லை ஆதீன வித்துவான் என். கே. பத்மநாதனுக்கு ''கானகலாபூஷணம்'' என்ற பட்டமும்; இசைப்புலவர் திரு. என். சண்முகரத்தினத்துக்கு ''கான வித்வ பூஷணம்'' என்ற பட்டமும், ஆசிரியர் த. பொன்னம்பலத்துக்கு ''சிவகதாரத்னம்'' என்ற பட்டமும், ஓவியர் மணியத்துக்கு ''ஓவியச் சுடரொளி'' என்ற பட்டமும் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தால வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

## திருச்சபையின் புதிய உறுப்பினர்

சுழிபுரம், வெள்ளி

மெதடிஸ்த திருசபையின் புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்: தலைவர்: வண. பிறட் எஸ். டி. சில்வா, உபதலைவர்: திரு. பி. ஈ. பெர்னுண்டோ, செயலாளர்: வண. எஸ். வி. சரவணமுத்து, தனாதிகாரி: திரு. ஓ. ஜே. எம். டிமெல்.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

வலிகாமம் மேற்கு இலவசப் பால் விநியோக நிலையங்களின் சங்க பொதுக்கூட்டம் மானிப்பாய் அதிகார்செல்லமுத்து நூல் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: சமூகஜோதி சி. தியாகராசா. காரியதரிசி: வித்துவான் எஸ். அடைக்கலமுத்து. தனாதிகாரி: எம். புண்ணியமூர்த்தி. நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## அரசியல் அரங்கிலிருந்து ஓடிவிடமாட்டேன்

### சிறிமாவோ கூறுகிறார்

அத்தனகலை, வெள்ளி

''இந்த அரசாங்கம் மக்களிடம் பழிவாங்கும் எண்ணம் தனக்கில்லை என்று பொதுத் தேர்தலின்கவில் பொய்யான வாக்குறுதிகளை அளிக்கலாம் அது எனது குடும்பத்தவரைப் பழிவாங்கப் பெரிதும் முயற்சிக்கலாம். ஆனால் தெருத் தெருவாகப் பிச்சை வாங்கும் நிலை எனக்கு ஏற்பட்டாலும் அரசியல் அரங்கிலிருந்து நான் ஓடிவிடமாட்டேன்.'' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா, நற்றம்புவ சங்கபோதி வித்தியாலயத்தில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் ஐக்கியதேசியக் கட்சியின் கொள்கையினால் சிங்கள மொழிக்கு இதுவரை கிடைத்த நிலை மாறி வெகுவிரைவில் ஆங்கிலமே உத்தியோக மொழியாக வரலாமென்றும் கூறினார்.

## ராணுவஜீப் விபத்துவழக்கில் சாரதிவிடுதலை

மாவிட்டபுரம், வியாழன்

மல்லாகம் நீதிபதி திரு. டி. எல். நெத்சிங்கா தமது முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ராணுவஜீப் விபத்து வழக்கில் ராணுவஜீப் சாரதியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.

இந்தவழக்கில் பலாலி ராணுவ முகாமைச்சேர்ந்த என் கே. டி. ஸ்ரீ வதன என்னும் ராணுவ உத்தியோகத்தர் உசா என்னும் 4699 இலக்க ஜீப்பை கடந்த 64ம் ஆண்டு ஜூலை மாதம் 17ம் தேதி மயிலிட்டியில் கவலையீனமாக ஓட்டி சி. வி. லொறியுடன் மோதியதாகவும், இந்த விபத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் கால்பிரேக் இல்லாது ஜீப்பை ஓட்டிச் சென்றதாகவும் காங்கேசன் துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டு இருந்தது. எதிரி சார்பில் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானர். வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதும் மோட்டார்கார் பரிசோகர் சாட்சியமளித்தார். இதனைத் தொடர்ந்து எதிர்தரப்பு வழக்கறிஞர் இச்சாட்சியத்தைக்கொண்டு எதிரி மீது உள்ளகுற்றச்சாட்டை நிரூபிக்கமுடியாது என்றும் எதிரியை விடுதலை செய்யும் படியும்வேண்டினார். நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

## கோட்டைக் கடையில் திருட்டு

கொழும்பு, சனி

கோட்டையிலுள்ள பெயிலி வீதியில் கடைஒன்றைஉடைத்து ரூபா 2185 பெறுமதியான கைக்கடிகாரங்களைக் கள்வர் களவாடிச் சென்றதாகத் தெரிகிறது.

## யாழ். ஐக்கிய வியாபார சங்கத்தின் சாதனை

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சுவீப் டிக்கெட்டுகள் சமீபகாலம்வரை குறைவாகவே விற்பனையாகிவந்தன. தேசிய லொத்தர் சபை நிர்வாகி இங்கு வந்து, யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாக அதிபரிடம் இப்பொறுப்பை ஒப்புவித்தார். இரண்டே வாரங்களில் 106-வது சீட்டிழுப்புக்கு வேண்டிய ஒழுங்கு செய்ததுடன், பரிசு மோட்டார்களை குடாநாடெங்கும் விளம்பரப்படுத்தியதின் பயனாக, ஒரு லட்சத்து 40 ஆயிரம் சீட்டுகள் குடாநாட்டில் விற்பனையாயின.

இந்தசாதனையின் பயனாக, யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் இப்பகுதியில் சுவீப் சம்பந்தமான முக்கிய அமைப்பாளராக நியமிக்கப்பெற்றுள்ளதென்றும், சீட்டுவிற்பனையால் சேரும் நிதி பொதுநலனுக்காக அரசாங்கம் செலவிடுகிறபடியால் இப்பொறுப்பைஏற்று நடத்துவதற்கு, மிகமகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டதாகவும் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

## சாம்ராஜ்ய புத்தக கண்காட்சி

லண்டன், செப். 16

அக்டோபர் மாதம் 15-ந் திகதியிலிருந்து 27-ந் திகதி வரை லண்டனில் சாம்ராஜ்ய புத்தகக் கண்காட்சி ஒன்று நடைபெறவிருக்கிறது. பிரிட்டிஷ் தேசிய புத்தக சங்கம் இந்தக் கண்காட்சியை ஒழுங்கு செய்ய இருக்கிறது.

'நூல்களில் சாம்ராஜ்யம்' என இப்புஸ்தக கண்காட்சி அழைக்கப்படும். இலங்கை உட்பட பல சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த பிரமுகர்கள் இந்தக் கண்காட்சிக்கென நல்லநூல்களைத்தெரிவு செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி சேர் ஜோன் கொத்தலாவல சாம்ராஜ்ய நாடுகளின் வனவாழ்க்கையை விளக்கும் பிலிப் குரோவி என்பவரது நூல் ஒன்றை தெரிவு செய்து கொடுத்தார்.

லண்டன் நகரிலுள்ள நியூஸிலந்து மாளிகையில் நடைபெற இருக்கும் இந்தக் கண்காட்சியில் சாம்ராஜ்யஇலக்கியத்தை விபரிக்கும் சுமார் 4300 நூல்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

## மொழிபெயர்ப்பாளர் மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

உள்ளூராட்சி சேவை மொழி பெயர்ப்பாளர் சங்கத்தின் இரண்டாவது வருடாந்த பொதுக்கூட்டம் கண்டி மாநகரசபை மொழிபெயர்ப்பாளர் திரு. குணரெட்ண தலைமையில் குருநாகலில் இம்மாதம் 26-ந் திகதி நடைபெறவிருக்கிறது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளுகிறார்கள்.

## வதிரியில் புதிய நெசவுநிலையம்

உடுப்பிட்டி, வெள்ளி

வதிரியில் புதியநெசவுநிலையமொன்று இம்மாதம் 23ம் திகதி உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்தால் திறந்துவைக்கப்படவிருக்கிறது.

# அகில இலங்கை பாடசாலை சாம்பியன் விளையாட்டுப் போட்டி

## அக்டோபரில் நடைபெறும்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கைபாடசாலைகளுக்கிடையேயான சாம்பியன் விளையாட்டுப் போட்டி ஒக்டோபர் 11-ம், 12-ம் தேதிகளில் பம்பலப்பிட்டி பொலிஸ் விளையாட்டு அரங்கில் நடைபெறவிருக்கிறது. நாட்டின் பலபகுதிகளைச் சேர்ந்த பாடசாலைகளிலிருந்தும் வரும் சிறந்த விளையாட்டு வீரர்கள் இருநாட்களிலும் நடைபெறும் இடபோட்டிகளில் பங்குபற்றுவர். இருநாட்களிலும் போட்டிகள் பகல் 1-15 மணிக்கு ஆரம்பமாகும்.

## பாடசாலைக்கட்டட திறப்புவிழா

கைதடி, வெள்ளி

கைதடியிலுள்ள யாழ் எருதிடல் அரசினர் பாடசாலையில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தை வித்தியாதிபதி திரு. ஹெட்டி ஆராய்ச்சி வரும் ஞாயிற்றுக்கிழமைதிறந்து வைக்கவிருக்கிறார். சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இவ்வைபவத்துக்கு தலைமைதாங்குவார். இதைத்தொடர்ந்து பெற்றோர் தினவிழாவும் நடைபெறும்.

## தாக்கியகுற்றத்துக்கு சிறைத்தண்டனை

சாவகச்சேரி, வெள்ளி

அல்லாரையைச் சேர்ந்த ஏ. சிவகுரு என்பவரைமீசாலையைச் சேர்ந்த ஏ. எவ். சேதுலிங்கம், எஸ். சின்னத்தம்பி, ரீ. பொன்னுத்துரை, கே. தாமோதரம்பிள்ளை ஆகிய நால்வரும் தாக்கிக் காயப்படுத்தியதாகச் சாவகச்சேரி பொலிசாரால் தாக்கல்செய்யப்பட்டவழக்கு கச்சேரி மாஜிஸ்திரேட் திரு. ஒருபேட்சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது எதிரிகளை குற்றவாளியாகக் கண்டுமுதலாம் இரண்டாம் எதிரிக்கு மூன்று மாதச் சிறைத்தண்டனையும் மூன்றும் நான்காம் எதிரிகளுக்கு ரூபா 70 அபராதமும் விதித்தார்.

## தண்ணீர் விநியோகத்தில் பாகுபாடு

யாழ்ப்பாணம், சனி

சுழிபுரம் கிராமசபைப் பகுதியில் தண்ணீர் விநியோகத்தில் பாகுபாடு காட்டப்பட்டுவருவதாக நாமகள் சனசமூகநிலையக்காரியதரிசி மந்திரி திரு. எம். திருச்செல்வத்திற்கு புகார் செய்துள்ளார்.

பாகுபாடு சாதிஅடிப்படையில்காட்டப்படுவதால் குடும்பங்கள் தண்ணீர்பெறுவதில் நேரத்தையும் காலத்தையும் வீணாக்கவேண்டியுள்ளதென்றும் அப்புகாரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோண்டாவிலில் திருட்டு அதிகரிப்பு

கோண்டாவில், வெள்ளி


கோண்டாவில் பகுதியில் திருடர்கள் நடமாட்டம் அதிகரித்திருப்பதாக அறியப்படுகின்றது. நேற்றுமுன்தினம் இப்பகுதியிலுள்ள வீட்டுக்கூரை ஒன்று உடைக்கப்பட்டு நகைகளும் பணமும் திருடப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது இதுசம்பந்தமாக இங்கு பொலிஸ் நாய் கொண்டுவரப்பட்டது.

## நெடுந்தீவு கொலை வழக்கு 29-ல் விசாரணை

யாழ்ப்பாணம், வெள்ளி

நெடுந்தீவு முக்கொலை வழக்கு நேற்றுக் காலை ஊர்காவற்றுறை மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ரி. ஜே. ராஜரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது நீதிபதி விசாரணையை இம்மாதம் 29-ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனாதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். - மட்டக்களப்பு பஸ்சேவை விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம். சனி

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்பிற்கு பகல்பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது, ஏற்கனவே மட்டக்களப்பிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இரவு பஸ்சேவை நடத்தப்பட்டு வருகிறது.

பகல் பஸ் சேவை யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் காலை 9, மணிக்கு ஆரம்பமாகி, மட்டக்களப்பிற்கு இரவு 8-மணிக்கு போய்ச்சேரும், இதேபோல் தினமும் மட்டக்களப்பிலிருந்து காலை 7-30 மணிக்கு ஆரம்பமாகி. யாழ்ப்பாணத்திற்கு இரவு 6.30 மணிக்கு வந்தடையும்

## சேக்கிழார்மன்ற தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

அகிலஇலங்கைசேக்கிழார் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் மன்றத் தலைவர் திரு.ம.ஸ்ரீகாந்தா தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் மன்றம்செய்ய வேண்டிய பணிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது, மன்றச் செயலாளருக்கு உதவியாக துணைச் செயலாளருள் ஒருவராகத் திரு. எஸ். பரநிருபசிங்கமும், பொருளாளருக்கு உதவியாக துணை பொருளாளருள் ஒருவராக வித்துவான் க,கணபதிப்பிள்ளையும் ஏகமனதாகதெரிவு செய்யப்பட்டனர்.

மாதந்தோறும்சேக்கிழார் மன்றக்கூட்டம் நடைபெற வேண்டுமென்றும் சேக்கிழாரைப்பற்றிச் சொற்பொழிவுகள்நிகழ்த்த வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

மாதந்தோறும் பல அறிஞர்களைக் கொண்டு நிகழ்த்தப்படவிருக்கும் சேக்கிழார் பற்றிய சொற்பொழிவுகளுக்கு மன்ற அங்கத்தவர்களாயுள்ள அனைவரும் தவறாது சமூகம் கொடுக்கவேண்டும் என்றும் ஒவ்வோர் அங்கத்தவரும் தனித்தனி ஐந்து புதிய அங்கத்தவர்களைச் சேர்த்தல் வேண்டுமென்றும் கூட்டத்தில்முடிவு செய்யப்பட்டது.

மாதந்தோறும் நடைபெறும் சேக்கிழார் பற்றிய சொற்பொழிவுகளுக்கு சமூகம்தர விரும்புவோர் தமதுவிலாசத்தை மன்ற செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சித்தாண்டிக்குடி சம்பவம்
### மற்றுமொருவர் மரணம்

கல்குடா, வெள்ளி

சித்தாண்டிக்குடி மொறக்கட்டாஞ் சேனை கைகலப்பில் துப்பாக்கிப்பிரயோகத்தினால் படுகாயமடைந்தவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில்' சென்ற புதன்கிழமை இரவு மரணமானார்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் ஸ்தலத்தில் மாண்ட மூவருடன் சேர்த்து சென்ற செவ்வாக்கிழமை நடைபெற்ற கோஷ்டிச்சண்டையில் பலியானவர்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்தது.

மேலும் அசம்பாவிதசம்பவங்கள் நிகழாதபடி இப்பகுதியில் பொலிசார் ரோந்துக்காவல் புரிந்து வருகின்றனர்.

## மீண்டும் 'யமனுக்கு' தவணை!

கொழும்பு, வெள்ளி

மங்கள எலியா கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்டு தூக்குக் கயிற்றை எதிர்பார்த்திருக்கும் ஆர். எம்.பொடிஅப்புஹாமி, மீண்டும் மரணதண்டனை நிறைவேற்றும் தினம் ஒத்திவைக்கப்பட்டதால் யமனுக்கு மற்றுமொரு முறை டிமிக்கி கொடுத்திருக்கிறார். பிரிவு கவுன்சிலுக்கு அப்பீல் செய்யப்பட்டிருப்பதால் மரண தண்டனை நிறைவேற்றும் தினம் அடுத்த மாதம் 15-ம் திகதி என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

## அங்கவீனர்கள் சங்கம்

யாழ்ப்பாணம்,சனி

அங்கவீனர்களுக்கான ஒரு சங்கத்தை உருவாக்குவதில் அரியகுட்டி குணசிங்கம் என்பவர் ஈடுபட்டிருக்கின்றார்.

அங்கவீனர்கள் அனைவரும் ஒன்றுபட்டு தம்எதிர்கால நலன்களைப்பேண முற்படவேண்டுமென்று குறிப்பிட்டு அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில், அங்கவீனர்களுக்கென ஒரு சங்கத்தை அமைத்து அச்சங்கத்தின் மூலம் தமது கோரிக்கைகளை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கவேண்டும்என்றும், ஒற்றுமையின் மூலம் பொருளாதாரத்தை வளர்த்து இந்த நாட்டின் பொருளாதாரத்தைப் பேணும் பங்கு தாரர்களாகவும் சுதந்திர புருஷர்களாகவும் விளங்க வேண்டுமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

## 'சுஹாட்டோவே நிலைப்பார்!'

கெய்ரோ, செப் 16

இந்தோனேஷிய அதிபர் சுகர்ணோவுக்கும், மந்திரி சபைத்தலைவரும், ராணுவத் தலைவருமான சுஹாட்டோவுக்குமிடையில் அபிப்பிராயபேதம் ஏற்பட்டால் சுஹாட்டோவே பதவியில் நிலைத்து நிற்பாரென்று இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி திரு. ஆடம்மாலிக் இங்கு தெரிவித்துள்ளார். இங்கு விஜயம் செய்துள்ள திரு. மாலிக் செய்திருபர்கள் மகாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு இவர் மூன்று நாள்விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

சுகர்ணோவுக்கும் சுஹாட்டோவுக்குமிடையில் இப்போது எவ்விதகருத்துவேற்றுமையுமில்லையென்றும் அவர் கூறினார்.

## போலீஸை அழைத்து...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

சூரியா சாட்சியமளிக்கையில் இறம்பகந்த ஒருநாள் தனது வீட்டுக்கு வந்து தனது மகனை அனுப்பி போலீஸ் குழுவைக்கூப்பிட்டதாகவும்' பின்னர் அவர்கள் தமது வீட்டிலிருந்து சிறிதுநேரம் பேசிக்கொண்டிருந்ததாகவும், போலீஸ் குழுவும் அங்கு வந்துபேசிக்கொண்டிருந்ததை தனது வீட்டுச்சொந்தக்காரர் ஆட்சேபித்ததைத்தொடர்ந்து அவர்கள் சென்றுவிட்டதாகவும்கூறினார்.

## அரசாங்கம் மீது....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டதனால்நீதிநிர்வாகத்துக்கு ஏற்படக்கூடிய அபாயம் குறித்து சபை விவாதிக்கவேண்டும் என்று அவசரப் பிரேரணை ஒன்றை எதிர்க்கட்சி அங்கத்தவர் திரு. நீல் டி அல்விஸ் கொண்டுவந்தார்.

இந்தப் பிரேரணையை விவாதிக்க அனுமதிப்பதா இல்லையா என்பது பற்றி தாம் நாளையதினம் தீர்ப்புக் கூறுவதாக உபசபாநாயகர் பதிலளித்தார்.

இந்தப் பிரச்சினை மிக முக்கியமானது என்றும் அது பற்றி விவாதிக்கும் சந்தர்ப்பம் இப்போதுதான் ஏற்பட்டிருக்கிறதென்றும் திரு பீட்டர் கெனமன் கூறினார்.

திரு. ஸ்டான்லி திலகரத்ன பேசுகையில் திரு. பெர்ணுண்டோ ஏற்கனவே புலன்விசாரணைகள் செய்து வருவதாகவும் இரகசிய பொலிஸ்காரியாலயத்தில் தஸ்தாவேஜுகளை எல்லாம் அவர் கிண்டி கிளறி வருவதாகவும் புலன்விசாரணைகளிலிருந்து திரு. பெர்ணுண்டோ ஒதுக்கிவைக்கப்படுவதற்கான உறுதியளிக்க வேண்டும் என்றும் கூறினார். புலன்விசாரணையிலிருந்து ஒதுக்கப்படுவார் என்று ராஜாங்கமந்திரிஉறுதியளித்தார்.

நம்பிக் கையில்லா பிரேரணை மாஜிஸ்டிரேட்டுக்கு எதிராக அமையவேண்டுமென்றும் முதலில் தற்கொலையென்று தீர்ப்பளித்து பின்னர் கொலையென்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது என்றும் ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு பிரேமதாஸா கூறினார். இவை அவசியமற்ற பொறுப்பற்ற வார்த்தைகள் என்று உபசபாநாயகர் கூறினார். அதன் பின் சபை தனிப்பட்ட அங்கத்தவர்களின் பிரேரணைகள் பற்றி ஆலோசிக்க ஆரம்பித்தது.

## போதனமொழி...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

வேண்டுமென வற்புறுத்தி வந்துள்ளனர். ஆனால் பெற்றோர் தமது பிள்ளை தாய் மொழியிலல்லாது வேறு மொழியில் போதிக்கப்பட விரும்பினால் அவ்விதம் அப்பிள்ளைக்கு வேறொரு மொழியில் போதிப்பதில் ஏன் தடையிருக்கவேண்டுமென மந்திரி இரியகொல்ல கேட்டார். ஒரு பிள்ளையின் பெற்றோரைவிடத் தமிழரசுக்கட்சியினருக்கு இதுவிஷயத்தில் என்ன உரிமை கூடுதலாக இருக்கிறது என்றும் அவர் கேட்டார். பிரதமரின் இரு சாரினருக்குமிடையில் ஒரு சுமுகமான சமரசத் திட்டமாக அமைத்துள்ளது என்று அவர் எடுத்துக் கூறி இது பொதுவாக ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு திட்டமென்றார்.

இத்திட்டத்தின்படி பெற்றோர் தமது பிள்ளையின் தாய்மொழி பற்றி உறுதிப்படுத்தலாம் என்றும் கல்வித்திரி தெளிவுப்படுத்தினார்

## பொலிஸ் அ கரி...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

செனட்டர் ரெஜி பெரேரா பேசுகையில் அந்த விசாரணை நடத்த நேர்மையும் தகுதியும் வாய்ந்த ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என்றார். இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் அதிகாரி மாத்தறையில் இருந்தபோது அவரைப் பற்றி 1960-ம் ஆண்டில் திரு. நீல் டி அல்விசும், பேர்சி பெர்னுண்டோவும்கண்டனங்களை தெரிவித்திருப்பதாகவும் அதை [illegible] ரியாக இருக்கும் தகுதியா கவும் [illegible] அவர் கூறினார்.

## 'சாரணர்பொன்விழா' இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சாரணர்களின் பொன் விழாவை, இன்று மாலை 4 மணிக்கு பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் அமெரிக்க ஸ்தானிகர் திரு. ஏச். ஈ. சிசில் பிலையன் ஆரம்பித்து வைப்பார்.

இன்று மாலை 5 மணிக்கு சாரணரின் புதிய கட்டடத்தை இலங்கை சாரணர் உதவிக் கமிஷனர் முதலியார் ஏ. எல். திஸநாயக்கா திறந்து வைப்பார். 5-30 மணிக்கு சாரணர்களின் கைப்பணி பொருட்காட்சியை உதவி வித்தியாதரிசி திரு. எஸ். தணிகாசலம் திறந்து வைப்பார். இவ் வைபவம் 20-ம் திகதிவரை நடைபெறும்.

நேற்றுக் காலை முதல், யாழ்ப்பாண மாவட்டத்தை சேர்ந்த பாடசாலைகளிலிருந்து வந்த சாரணர்கள், பழைய பூங்காவில் கூடாரம் அமைத்துள்ளார்கள். இவ் வைபவத்தில் சுமார் 2000 சாரணர்கள் கலந்து கொள்வார்கள். இந்தியாவிலிருந்தும், இவ் வைபவத்திற்கு பிரதிநிதிகள் வந்துள்ளனர்.

## முதலில்....

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

தாக்கப்பட்டதாகக்கூறப்படும் அறையில் இருந்த அதிகாரிகள்மீது கணிசமான அளவு சந்தேகம் இருப்பதாகவும் ஆனால் அந்த அதிகாரிகள் யார் யார் என்பது தமக்குத்தெரியாது என்றும் நீதவான்கூறினார். நீதவான் வழக்கைப்பதிவு செய்து விசாரணை ஆரம்பிக்க வேண்டுமென்று முடிக்குரிய வழக்கறிஞர் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கையில் அரசாங்க தரப்பில் வழக்கை தாக்கல் செய்யும்படி வழக்கறிஞரிடம் நீதவான் கூறினார். எதிரிகளின்பெயர்களைக் கூறி கைது செய்ய உத்தரவுபிறப்பிக்கும்படி வழக்கறிஞர் வற்புறுத்தினார்.

தாம் அளித்துள்ள தீர்ப்பின் மீது அட்டோர்னி ஜெனரல் நடவடிக்கைமேற்கொள்ளவேண்டுமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும், பொலிஸ் அதிகாரிகளைக் கைதுசெய்யதாம் உத்தரவிட எண்ணாமல் இல்லை ஆனால் முதலில் அட்டோர்னி ஜெனரல் நடவடிக்கை எடுப்பதை எதிர்பார்ப்பதாகவும் நீதவான் கூறினார்.

இந்தவிஷயம் பொலிஸ் இலாகாவினாலும் அட்டோர்னிஜெனரல் இலாகாவினாலும் புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டு வழக்குத் தாக்கல்செய்யப்பட வேண்டிய ஒன்றாகுமென்று குறிப்பிட்ட நீதவான், தற்கொலை என்பதை கொலை என்று மாற்றி தீர்ப்பை அட்டோர்னி ஜெனரல் இலாகாவுக்கு அனுப்புவதாக கூறினார்.

---

மாத்தறையில் அந்த அதிகாரி கடமையாற்றிக் கொண்டிருந்த போது ஆடுகள் காணாமல் போவதற்கும் பொலிஸ் புகார் புத்தகம் காணாமல் போவதற்கும் காரணமாய் இருந்திருக்கிறார் என்றும் தொடம்பே முதலாளியுடன் ஏதோ ஒரு தகராறில் சம்பந்தப்பட்டிருந்ததாகவும் செனட்டர் ரெஜி பெரேரா கூறினார்.

செனட்டர்கள் கூறிய விஷயங்களை சம்பந்தப்பட்ட மந்திரிகளின் கவனத்துக்கு கொண்டு வருவதாக செனட் தலைவர் டாக்டர் எம். வி. பி. பீரிஸ் வாக்களித்தார்.

## பெண் மீது லஞ்ச வழக்கு
### அக்.7-ல் விசாரணை

கொழும்பு, வெள்ளி

லஞ்சக்குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ள கல்கிசையைச் சேர்ந்த திருமதி டுல்வெல இன்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எஸ். ஆர். விஜயதிலகா முன் ஆஜரானார்.

தாம் சுற்றவாளி என திருமதி டுல்வெல கூறினார்.

கொழும்பு குதிரைப்பந்தயத்திடலில் பொருட்காட்சிக்கென மின்சார தீப அலங்காரம் செய்வதற்கு ஒப்பந்தம் எடுத்துக் கொடுத்தால் அந்தத் தொகையில் பதினைந்து சதவீதத்தொகை தமக்குத் தரப்படவேண்டுமென திருமதி டுல்வெல ஒரு ஸ்தாபனத்திடம் கோரியதாக இவ் வழக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணை அடுத்த மாதம் 7-ம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## தகவல்புத்தகத்தில் :.

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வேண்டும். முதலாவது, தகவல் புத்தகத்தைத் தடுத்து, அப் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களிலிருந்து சாட்சியங்களைக் கேள்வி கேட்பதற்கு நீதவானுக்கு உரிமை இருக்கின்றதா என்பது. இரண்டாவது சாட்சிக் கட்டளையின் 169-ம் பிரிவுகளைப் பயன்படுத்தி, சாட்சி ஒருவரின் ஞாபகசக்தியைப் புதுப்பித்தல்.

இரண்டாவது கேள்வியைப் பொறுத்தவரை, பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களை, அவ் வாக்குமூலங்களைப் பதிவுசெய்தவர்களுடைய ஞாபகசக்தியைப் புதுப்பிக்க பயன்படுத்துவது பற்றித் தமக்கு எதுவித ஆட்சேபனையுமில்லை என்று திரு. கே. ஸி. டி. சில்வா கூறினார். ஆனால், அவற்றை வாக்குமூலமளித்தவரைக் கேள்வி கேட்பதற்காகப் பயன்படுத்த முடியாது.

நீதவான் எதிரிதரப்பு வழக்கறிஞருக்கெதிராகத் தீர்மானித்தால், இவ் விஷயத்தை எதிர்தரப்பு வழக்கறிஞர் சுப்பிரீம்கோர்ட்டில் கிளப்புவார் என்று திரு. கே. ஸி. டி' சில்வா தெரிவித்தார். கோட்டாருக்கு இதனை அறிவித்தல் தமது கடமைஎன்றார் அவர். ஏனெனில், எதிரிகளுக்கு எதிராக நீதவான் சாட்சியங்களைப் பதிந்தாரானால், எதிர்கால சுப்ரீம் கோர்ட் விசாரணை ஒன்றிலும் இதே சாட்சியங்கள் பயன்படுத்தப்படலாம். அத்துடன், சட்டவிரோதமாகப் பதிவுசெய்யப்படும் சாட்சியங்களும், அது பத்திரிகைகளில் வெளியிடப்படுவதும் எதிரிகளுக்கெதிரான பாரபட்சத்தை உண்டாக்க ஏதுவாகும்,

முடிக்குரிய வழக்கறிஞர், திரு. யூ. எல். ஏ. புல்லநாயகம் முடிக்குரிய தரப்புக்கான வாதத்தைத் தொகுத்துக் கூறிய பின், நீதவான் தீர்ப்பை ஒத்திவைத்தார்.

## கேதீச்சரத்துக்கு நேரடிபஸ்சேவை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திலிருந்து கேதீச்சரத்திற்கு விரைவில் நேரடி பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்படவிருக்கிறது. இந்த பஸ்சேவை வாரத்தில் ஒருமுறை வார்இறுதி பஸ் சேவையாக இருக்கும்.

வியாபாரம் பெருக விளம்பரம்செய்க

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org